# கல்லூரி ஆண்டு மலர்

## 2015 - 2016




# சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

(Affiliated to Bharathiar University, Coimbatore)

Re-accredited with B Grade by NAAC

**திருப்பூர் - 641 602, தமிழ்நாடு.**

# கல்லூரி ஆண்டு மலர்

## 2015 - 2016



## சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி

திருப்பூர் - 641 602, தமிழ்நாடு.

**பதிப்பாசிரியர் :**
முனைவர் **கு.சண்முகசுந்தரம்** M.Com., M.Phil, Ph.D.,
முதல்வர்

**ஆசிரியர் :**
முனைவர் **நா.பாலசுப்பிரமணியன்** M.A., M.Phil, Ph.D.,
உதவிப் பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ்த்துறை

**ஆசிரியர் குழு**
**இரா.செங்கமுத்து** M.A.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

முனைவர் **நா.பூங்கொடி ஸ்ரீ** M.A., M.Phil, Ph.D.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத்துறை

முனைவர் **செ.சூசன் நிர்மலா** M.A., M.Phil, Ph.D.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத்துறை

**சிக்கண்ணா அரசு கலைக்கல்லூரி**
கல்லூரி சாலை, திருப்பூர் - 641 602, தமிழ்நாடு.
தொலைபேசி : **: 0421 - 2242152**
தொலை நகல் : **0421 - 2246600**
மின்னஞ்சல் : **principal@cgac.in**
இணையத்தளம் : **Web : www.cgac.in**

# மலர் முகம்

திருப்பூர், சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியின்
ஆண்டு மலர் 2015 - 2016 இப்பொழுது உங்கள் கைகளில்.

இக்கல்வியாண்டில் நாள்தோறும் பல்வேறு நிகழ்வுகள் நடந்துள்ளன. அவற்றுள் சிலவற்றை துறை வாரியாகத் தொகுத்து வழங்கியுள்ளோம். கல்லூரியின் சிறப்பான அன்றாட செயல்பாடுகளுக்கு இம்மலரே சாட்சி.

ஆசிரியர், மாணவ, மாணவியரின் படைப்புகளும் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. அவற்றில் இன்றைய சமூக நிலையையும், எதிர்காலக் கனவுகளையும் காண முடிகிறது.

இம்மலர் வெளிவரத் துணை நின்ற அத்துணை நல் இதயங்களுக்கும் நன்றி சொல்கின்றோம்.

இப்படிக்கு
மலர்க்குழு



# ஆண்டறிக்கை

## 2015 - 2016

கல்வியாண்டு



முனைவர் **கு.சண்முகசுந்தரம்** எம்.காம்., எம்.ஃபில்., பிஎச்.டி.
முதல்வர்

கடந்த 1966ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி 50வது ஆண்டு பொன் விழாவை இந்த ஆண்டிலே அடைந்திருக்கிறது. இந்த 50 ஆண்டு காலத்திலே இந்தக்கல்லூரி இந்த ஊருக்கு மட்டுமல்ல, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருந்து கல்வி பயின்ற பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் வாழ்விலே ஒளியேற்றி வைத்திருக்கிறது.

இக்கல்லூரியில் 13 இளநிலைப் பட்ட வகுப்புகளும், 7 முதுநிலைப் பட்ட வகுப்புகளும், 7 ஆய்வுப்படிப்புகளும், 7 முனைவர் பட்ட வகுப்புகளும் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 2950 மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர்.

இக்கல்வியாண்டு முழுவதும் ஒவ்வொரு நாளும் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் துறை வாரியாக நடைபெற்ற ஒரு சில முக்கிய நிகழ்வுகளை மட்டுமே இங்கு குறிப்பிடுகிறேன்.

### தமிழ்த்துறை

தமிழ் முதன்மைப் பாடமாக இல்லாமல் மொழிப்பாடமாக மட்டுமே இக்கல்லூரியில் உள்ளது. பேச்சு, கவிதை, கட்டுரை, நடனம், ஓவியம் போன்ற கலைகளில் அனைத்துத்துறை மாணவ மாணவியர்களுக்குப் பயிற்சிகள் ஆண்டு முழுவதும் வழங்கப்படுகின்றது. பல்வேறு கல்லூரிகளிலும் அமைப்புகளிலும் நடைபெறும் போட்டிகளுக்கும், கலை நிகழ்ச்சிகளுக்கும் இம்மாணவ மாணவியர் அனுப்பி வைக்கப்படுகின்றனர். அந்த வகையில் ஆண்டு முழுவதும் பரிசுகளும், சான்றிதழ்களும் பெற்று இவர்கள் இக்கல்லூரிக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

19.2.2016 வெள்ளிக்கிழமை தமிழ் மன்ற விழா நடைபெற்றது. உடுமலைப்பேட்டை அரசு கலைக்கல்லூரி தமிழ்ப்பேராசிரியர் முனைவர் சிவசுப்பிரமணியன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "இலக்கியம் காட்டும் வாழ்வியல் நெறிகள்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## ஆங்கிலத்துறை

பேச்சு, எழுத்து, நாடகம் போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சியும் வழிகாட்டுதல்களும் இத்துறையின் வாயிலாக அளிக்கப்படுகின்றது. ஆங்கில மன்ற விழா 21.03.2016 அன்று நடைபெற்றது. ஓய்வு பெற்ற கோவை அரசு கலைக்கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் கருணாமூர்த்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்குப் பரிசுகள் வழங்கினார்.

அவர் தனது சிறப்புரையில், ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தையும், இன்றைய காலக்கட்டத்தில் ஆங்கிலத்தின் மூலமாகப் பெறுகின்ற வேலைவாய்ப்புகளையும் எடுத்துரைத்தார். அப்துல் கலாம் நினைவாக நடைபெற்ற NSS பேரணியில் இத்துறை மாணவர்கள் பங்கேற்றனர்.

## வரலாற்றுத்துறை

வரலாற்றுத் துறையில் ஏப்ரல் 2015ல் நடைபெற்ற பருவத் தேர்வில் 66% மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்று பட்டம் பெற்றனர். அதில் R.அன்பழகன் என்ற மாணவர் பல்கலைக்கழக அளவில் மூன்றாம் இடம் பெற்று துறைக்கும், கல்லூரிக்கும் பெருமை சேர்த்தார்.

வரலாற்றுத்துறையும் தமிழ்நாடு அரசு சுற்றுலாத்துறையும் இணைந்து உலக சுற்றுலா தின விழாவினை 30.9.2015 அன்று நம் கல்லூரியில் சிறப்பாக நடத்தின. மாணவ, மாணவியரின் சுற்றுலா தின பேரணிக்குப் பின் கல்லூரி முதல்வர் முனைவர் கு.சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற உலக சுற்றுலா தினவிழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.G.கோவிந்தராஜ் அவர்கள் சிறப்புரையாற்றினார். மேலும் திருப்பூர் மாவட்ட உதவி சுற்றுலா அலுவலர் திரு.N.அன்பரசு அவர்கள் தலைமையில் “நூறு கோடி சுற்றுலாப் பயணிகள் நூறுகோடி வாய்ப்புகள்” எனும் கருப்பொருளில் கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழா தொடர்பாக கல்லூரி அளவில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் ஓவியப் போட்டிகளில் இத்துறை மாணவ மாணவியர் பல பரிசுகளை வென்றனர்.

வரலாற்றுத்துறை மாணவ மாணவியர் தங்கள் பாடத்திட்டத்தோடு தொடர்புடைய சுற்றுலாத் தலங்களான கங்கை கொண்ட சோழபுரம், பிச்சாவரம், சிதம்பரம், பூம்புகார் மற்றும் தரங்கம்பாடி ஆகிய இடங்களுக்கு 11.2.2016 மற்றும் 12.2.2016 ஆகிய இருநாட்கள் கல்விச்சுற்றுலா மேற்கொண்டு கள ஆய்வு செய்து திரும்பினர். கல்லூரி விளையாட்டு தினவிழாப் போட்டிகளிலும் இத்துறை மாணவ மாணவியர் பல பரிசுகளை வென்றனர்.

## கணிதத்துறை

இத்துறையில் இளநிலை கணித வகுப்பில் 177 மாணவர்களும் முதுநிலை கணித வகுப்பில் 95 மாணவர்களும் ஆராய்ச்சிப் பட்ட வகுப்பில் முழுநேரம்-6 மாணவர்களும், பகுதிநேரம்-2 மாணவர்களும், பயின்று வருகிறார்கள்.

மேலும் இந்த ஆண்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகள் பலவற்றில் இத்துறை மாணாக்கர்கள் வெற்றி பெற்றுள்ளனர்.

இவ்வாண்டில் இத்துறை சார்ந்த பேராசிரியர்கள் மூவர் தங்களின் முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளனர். மேலும் M.Phil மாணவி ஒருவர் ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளார்.

17.03.2016 அன்று நடைபெற்ற கணித மன்ற விழாவில் திருப்பூர் எல்.ஆர்.ஜி அரசு மகளிர் கலைக் கல்லூரி கணிதப் பேராசிரியர் முனைவர் ஏ.மனோன்மணி அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## இயற்பியல் துறை

இயற்பியல் துறையில் 25 ஆண்டுகள் பணியாற்றி, தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம். திருப்பூர் கிளையின் சார்பிலும், மண்டல அளவிலும், பல்வேறு பொறுப்புகளை ஏற்றும் பாரதியார் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு (Senate) உறுப்பினராகவும் இத்துறையின், துறைத்தலைவராகவும், விளங்கி இக்கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றிய இணைப்பேராசிரியர் P.R.குமார் அவர்கள் 31.05.2015ல் ஓய்வு பெற்ற பிறகு இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கும் முனைவர் ஹரேஷ் M.பண்டியா அவர்கள் துறைத்தலைவராக 18.06.2015 முதல் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

இக்கல்வியாண்டில் சேர்க்கை செய்யப்பட்ட முதலாம் ஆண்டு இளநிலை மற்றும் முதுநிலை இயற்பியல் மாணவர்களின் பெற்றோர்களுடன் கலந்துரையாடல் 22.06.2015 அன்று நடைபெற்றது. அதே நாளில் முதலாமாண்டு மாணவர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

இக்கல்வியாண்டிற்குரிய செய்முறைப் பாடத்திற்கு ஆய்வக உபகரணங்கள் வாங்குவதற்கு stores and equipments maintenance - கணக்கில் ரூ.49,000/- மாநில நிதியில் இருந்து இத்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் நூலகத்திற்காக ரூ.14,000/- ஒதுக்கப்பட்டு, புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

இணையத்தில் முகநூல் வழியாக 800 மின்னணுப் புத்தகங்கள் (e-book) இத்துறையின் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இதை பல்வேறு நாட்டினர் உபயோகப்படுத்தி வருகின்றனர். துறைத்தலைவர் அவர்களால் DRDO-க்கு 1,45,00,000/- மதிப்பிலான major research project சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்திய விண்வெளித் திட்ட

ஆய்வு மையத்திற்கு (ISRO) ரூ.45,00,000/-மதிப்பிலான major research project - February - 2016-ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்துறையில் பணிபுரியும் உதவிப்பேராசிரியர்கள் 87 - ஆய்வுக் கட்டுரைகளை பல்வேறு விதமான உலகளாவிய மற்றும் தேசிய அளவிலான பத்திரிக்கைகளில் வெளியிட்டுள்ளார்கள்.

5.8.2015ல் இயற்பியல் மன்றத் துவக்கவிழா சிறப்பு விருந்தினர்கள் பேராசிரியர் உஷா மற்றும் முனைவர் காஞ்சனா அவர்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

7.9.2015ல் இத்துறையின் சார்பில் முன்னாள் இந்தியக்குடியரசுத்தலைவர் Dr.இராதாகிருஷ்ணன் நினைவாகக் கொண்டாடப்படும் 'ஆசிரியர் தினம்' மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

30.9.2015ல் கோவை மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குனர் அவர்கள் கல்லூரிக்கு வருகை புரிந்து இயற்பியல் துறையினைப் பார்வையிட்டு பாராட்டிச் சென்றுள்ளார்.

19.9.2015ல் பாரதியார் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறை இணைப்பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற முனைவர் செல்வசேகர பாண்டியன் அவர்கள் வருகை புரிந்து மாணவர்களுக்கு 'சோலார் செல் மற்றும் மெல்லிய படலம்' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

இக்கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு முனைவர் பட்டம் பெற்ற மூன்று பேராசிரியர்கள் இயற்பியல் துறையில் பணி அமர்த்தப்பட்டார்கள். இதன்மூலம் துறையின் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டன. இக்கல்வியாண்டில் இத்துறையில் ஐந்து மாணவர்கள் எம்.ஃபில் பட்டமும், ஒரு மாணவி முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசுக் கல்லூரி ஆசிரியர் கழகம், CGAC-கிளையின் சார்பாக முனைவர் V.அண்ணாமலை அவர்கள் பொருளாளராகவும், திரு.V.செந்தில்குமார் அவர்கள் செயற்குழு உறுப்பினராகவும் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்கள்.

ஜனவரி 2016-ல் இரண்டாமாண்டு பயிலும் முதுநிலை மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்குபெற்று முப்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார்கள். மூன்றாமாண்டு இளநிலை மாணவர் C.சதீஸ்குமார், Dr.A.P.J.அப்துல் கலாம் அவர்களின் பிறந்தநாள் விழா அன்று நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடமும், திருப்பூர் மாவட்ட ஆணையர் சார்பில் நடைபெற்ற லஞ்ச ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு ஆகிய தலைப்புகளில் நடைபெற்ற கட்டுரைப் போட்டி மற்றும் கவிதைப் போட்டிகளில் மாவட்ட அளவில் முதலிடமும் பெற்று இத்துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள். எம்.ஃபில் ஆராய்ச்சி மாணவர் P.கௌதமன் மூன்று கல்லூரிகளில் நடைபெற்ற கருத்தரங்குகளில் முதல் பரிசினைப் பெற்றுள்ளார்.

துறையின் சார்பாக விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை, ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகை ஆகியவை மாணவர்கள் மற்றும் முதல்வர் அவர்கள் முன்னிலையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. துறையின் சார்பாக பல்வேறு வகையான முப்பத்திரண்டு வகையான நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன.

## வேதியியல் துறை

கல்லூரியின் இக்கல்வியாண்டு 18.06.2015 அன்று துவங்கியது. கலந்தாய்வின் மூலம் வேதியியல் இளநிலை முதலாமாண்டில் 48 மாணவ மாணவியர் சேர்க்கப்பட்டனர். முதுநிலையில் 16 மாணவ மாணவியர் சேர்க்கப்பட்டனர்.

2015-2016 க்கான கல்லூரி தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரியாக துறைத்தலைவர் முனைவர் ந.சிவக்குமார் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கடந்த பருவத்திற்கான பாரதியார் பல்கலைக்கழகம் வெளியிட்ட தேர்வு முடிவில் முதுநிலை மாணவர் எம்.பாண்டி முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழக தங்கப்பதக்கம் வென்றார். வி.ஹரிவிக்னேஷ் நான்காம் இடம் பெற்றார்.

19.08.2015 அன்று சென்னை இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி நிறுவனத்தில் லூமினஸ்சன்ஸ் மெட்டிரியல் மற்றும் பயன்பாடுகள் என்ற தலைப்பில் நடைபெற்ற இரண்டு நாள் பட்டயப் பயிற்சியில் முனைவர் சு.ப.ராஜாசிங் கலந்து கொண்டார்.

24.08.2015 அன்று முனைவர் சி.கார்த்திகேயன் அவர்களின் மாணவரும், துறையின் முதல் M.Phil மாணவருமாகிய G.தமிழரசனின் வாய்மொழித் தேர்வு நடைபெற்றது.

இந்தாண்டு M.Phil மற்றும் Ph.D. படிப்புகளில் 8 மாணவர்கள் சேர்க்கை பெற்றுள்ளனர். 4.10.2015 அன்று திருச்சி பைலார் பிளனேட்-ல் நடைபெற்ற குடியரசு தின விழாவில் இத்துறையைச் சார்ந்த NCC மாணவர் ஆர்.கௌதம் கலந்து கொண்டார்.

21.10.2015 அன்று முதல்வர் தலைமையில் மன்றத் துவக்க விழா நடைபெற்றது. குவஹாத்தி ஐ.ஐ.டி பேராசிரியர் முனைவர் புகழேந்தி சிறப்புரையாற்றினார். கோவை பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் முனைவர் முருகவேல், கோவை ராமகிருஷ்ணா தொழில்நுட்பக் கல்லூரி பேராசிரியர் முனைவர் டேனியல் தங்கதுரை மற்றும் திருச்சி அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ஜோதி வெங்கடாசலம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் இத்துறை பேராசிரியர் முனைவர் சி.கார்த்திகேயன் அவர்களின் Ph.D மாணவிகள் பி.சாந்தி மற்றும் எஸ்.மகேஸ்வரி ஆகியோரின் வாய்மொழித்தேர்வு நடைபெற்றது.

6.1.2016 அன்று கோவை கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கெம் பாண்டு 16 என்ற நிகழ்ச்சியில் இத்துறை மாணவர் எம்.பிரதீப், ஆர்.பிரவீன் குமார் மற்றும் மா.பிரதாப் கலந்து கொண்டனர். 21.1.2016 அன்று கோயமுத்தூர் தொழில்நுட்பக் கல்லூரியில் யுபோரியா என்ற நிகழ்ச்சியிலும் இத்துறை மாணவ மாணவியர் கலந்து

கொண்டனர். கோபி கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற கெம் பிரீஸ் 16 என்ற நிகழ்ச்சியில் இளநிலை முதலாமாண்டு மாணவன் நா.முகம்மது ஆசிஃப், சங்கமேஸ்வரன் மற்றும் இரண்டாமாண்டு மாணவர்கள் மா.அப்துல் நாசர், டி.தனபால் கலந்து கொண்டனர். இதில் டி.தனபால் நம் அன்றாட வாழ்வில் வேதியியல் என்ற தலைப்பில் கட்டுரை வாசித்து முதல் பரிசை வென்றார்.

முதுநிலை இரண்டாமாண்டு மாணவன் எஸ்.வினோத் மற்றும் மாணவி ஜி.கோகிலவாணி ஆகியோருக்கு சென்னை கல்கி நினைவு அறக்கட்டளை சார்பாக கல்வி உதவித்தொகை தலா ரூ.10000 வழங்கப்பட்டது.

இத்துறை பேராசிரியர் முனைவர் சு.ப.ராஜாசிங் NSS திட்ட அலுவலராகவும், முனைவர் ந.கனகாச்சலம் உடற்பயிற்சிக்கான உபகரணக்குழுவின் உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 19.2.2016 மற்றும் 25.2.2016 ஆகிய இரண்டு நாட்களில் முனைவர் சி.கார்த்திகேயன் அவர்களின் மாணவிகளான கே.அனிதா மற்றும் வி.அங்குலட்சுமி ஆகியோரின் Ph.D பட்ட வாய்மொழித்தேர்வு நடைபெற்றது.

மதுரை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சி.ஆர்.எஸ்.ஐ இன்றைய வேதியியல் என்ற தலைப்பிலான மூன்று நாள் கருத்தரங்கில் முனைவர் சு.ப.ராஜாசிங் மாணவர்களுடன் கலந்து கொண்டார்.

24.2.2016 அன்று இத்துறைப் பேராசிரியர் முனைவர் சி.கார்த்திகேயன், முனைவர் ந.சம்பத் குமார், முனைவர் மா.சிவதயாநிதி மற்றும் பெ.விஜயன் ஆகியோர் வீரபாண்டி பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தொழிற்சாலை பார்வைக்காக மாணவ மாணவியருடன் சென்று வந்தனர். 4.3.2016 அன்று அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் சென்னை இந்திராகாந்தி அணு ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய வேதியியல் செயல்முறை விளக்கத்திலும், மார்ச் 11, 12ல் கோவை பி.எஸ்.ஜி.ஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கலைக்கல்லூரியில் இந்திய அறிவியல் அகாடமி நடத்திய பயிற்சிப் பட்டறையிலும் மாணவ மாணவியர் கலந்து கொண்டனர்.

துறை சார்ந்த பேராசிரியர்கள் இக்கல்வியாண்டில் பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய ஆய்வு இதழ்களில் 10 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டு பெருமை சேர்த்துள்ளனர்.

## விலங்கியல் துறை

இளநிலை முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளுடன் இத்துறை செயல்பட்டு வருகிறது. இத்துறையும் தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றமும் இணைந்து கிராமப்புறப் பகுதிகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பயன்பாடு குறித்த 5 நாள் பயிற்சி பட்டறை பல்வேறு தலைப்புகளில் நடத்தப்பட்டது.

இத்துறைப் பேராசிரியர் முனைவர் ஏ.மோகன்குமார் இப்பயிற்சிப் பட்டறையின் ஒருங்கிணைப்பாளராக இருந்து வரவேற்புரையாற்றினார். முதல்வர் முனைவர்

கு.சண்முகசுந்தரம் முன்னிலையில் திருப்பூர் மாநகர துணைமேயர் சு.குணசேகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். துறைத்தலைவர் முனைவர் எம்.கல்யாணசுந்தரம் தலைமை தாங்கினார். 13வது வார்டு கவுன்சிலர் ஆர்.ஏ.சேகர் வாழ்த்துரை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்கு பல்வேறு பகுதிகளில் இருந்து அறிவியல் தொழில்நுட்ப பயன்பாடு குறித்த பயிற்சி தர சிறப்பு வல்லுனர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியின் தொடக்கமாக 22.12.2015 அன்று மண்புழு உரம் தயாரித்தல் பயிற்சிப் பட்டறையில் திரு. எஸ்.சரவணன் (கார்த்திக் மண்புழு உரத்தொழிற்சாலை, மதுரை மாவட்டம்) அவர்களும்

23.12.2015 அன்று காளான் வளர்ப்பு பயிற்சிப் பட்டறையில் திரு. ஆர்.ராஜா (ஸ்ரீ காளான் பண்ணை, ஈரோடு மாவட்டம்) அவர்களும்

26.12.2015 அன்று இயற்கைத்தோட்டம் அமைத்தல் பயிற்சிப் பட்டறையில் டாக்டர் ஆர்.செல்வராஜ் (பேராசிரியர் மற்றும் தலைவர் கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் திருப்பூர்) அவர்களும்

27.12.2015 அன்று தேனீ வளர்ப்பு பயிற்சிப் பட்டறையில் திரு. ஏ.பார்த்தீபன் (ஸ்ரீ முருகன் தேனீ வளர்ப்பு மையம், கோபிசெட்டிபாளையம்) அவர்களும்

10.01.2016 அன்று அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சிப் பட்டறையில் திரு. எஸ்.விஜயகுமார் (அன்னை அலங்கார மீன் வளர்ப்பு பயிற்சி மையம், மதுரை மாவட்டம்) அவர்களும் பயிற்சிகளை வழங்கினர்.

இப்பயிற்சிப் பட்டறையில் கிராமப்புறப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களும் விவசாயிகளும், மகளிர் சுயஉதவிக்குழுவினரும், மாணவ மாணவியரும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## கணினி அறிவியல் துறை

இத்துறையுடன் இணைந்து கணினி பயன்பாட்டியல் துறையும் செயல்பட்டு வருகிறது. B.Sc., Computer Science - 1st Shift, B.Sc., Computer Science - 2nd Shift, BCA, M.Sc, Computer Science, M.Phil, Ph.D., ஆகிய படிப்புகள் வழங்கப்படுகின்றன.

கணினி அறிவியல் துறை மன்றம் 20.08.2015 அன்று கல்லூரி முதல்வர் தலைமையில் கோவை Placement Season.com நிறுவனர் திரு. டி.பி.செந்தில்குமார் அவர்களை சிறப்பு விருந்தினராகக் கொண்டு துவக்கி வைக்கப்பட்டது. முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி Technology Rights and Using the Technology Rights என்ற தலைப்பில் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் கலந்து கொண்டு கையெழுத்திட்டனர்.

2.9.2015 அன்று Android Technologies என்ற தலைப்பில் அவினாஷ் அகாடமியைச் சார்ந்த திரு. விக்னேஷ் மணிகண்டன் உரையாற்றினார்.

7.9.2015 அன்று Placement readiness and Web designing concepts குறித்து Leemac Business solutions நிறுவனர் திரு. வி.விஜயகுமார் (முன்னாள் மாணவர்) மற்றும் திரு. சி.முரளி ஆகியோர் உரையாற்றினர்.

15.9.2015 அன்று திருப்பூர் JC என்.சம்பத் குமார் அவர்களின் தலைமையில் JCI இந்தியாவின் மண்டல பயிற்றுனர்கள் ஊட்டி JC ராஷ்மி, JC நித்யா, JC ராஜேஷ் போரா ஆகியோரைக் கொண்டு Goal setting என்ற தனி மனித முன்னேற்றம் குறித்த நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

7.1.2016 அன்று Vettripadi Technologies அமைப்பைச் சேர்ந்த திரு. சிந்து இராதாகிருஷ்ணன் Web Application என்ற தலைப்பில் உரையாற்றினார்.

30.1.2016 அன்று வேலைவாய்ப்பு சார்ந்த நிகழ்ச்சியாக Computer Hardware and Networking என்ற தலைப்பில் Lead Technologies நெட்வொர்க் என்ஜினியர் J.மணிகண்டன் செயல்முறை விளக்கம் கொடுத்தார்.

9.2.2016 அன்று JCI இந்தியாவின் தேசிய பயிற்றுனர் JC பிரின்ஸ் அவர்களால் Empowering Youth and Effective Public Speaking என்ற ஒரு நாள் workshop நடத்தப்பட்டது. இதில் மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி பல செய்முறை விளக்கங்களுடன் நடைபெற்றது. தலைமைப்பண்பு, சவால்களை எதிர்கொள்ளுதல், உடல்நலன், மனநலன் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டது.

மூன்றாமாண்டு BCA மாணவர் வி.கார்த்தி Wipro Technologies நிறுவனத்திலும், இரண்டாம் ஆண்டு M.Sc. மாணவி எஸ்.ஹரிபிரபா Dell நிறுவனத்திலும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மேலும் எஸ்.திவ்யபாரதி பல்கலைக்கழக கால்பந்தாட்டக் குழுவில் இடம் பெற்றுள்ளார். இத்துறைப் பேராசிரியர்கள் சர்வதேச மற்றும் தேசியக் கருத்தரங்குகளில் கட்டுரை வாசித்துள்ளனர்.

23.3.2016 அன்று கணினி மன்ற நிறைவு விழா முதல்வர் முனைவர் கு.சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் கல்லூரி நூலகர் முனைவர் சித்ரா தவப்புதல்வி அவர்கள் Sources and resources என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## ஆடை வடிவமைப்பு மற்றும் நாகரீகத்துறை

22.01.2016 அன்று SCM குரூப் - ஆப் கம்பெனிஸ் மூலம் நடைபெற்ற வளாக நேர்முகத்தேர்வில் கலந்து கொண்டு துறை சார்ந்த 14 மாணவ மாணவிகள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

25.1.2016 அன்று இத்துறையின் சார்பாக நடைபெற்ற மன்ற விழாவில் திரு.ராஜா, M.சண்முகம் (Managing Director, Warshaur international, Tirupur) அவர்கள் ""Prospects of Textile Industry for Emerging Entrepreneur" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## வணிகவியல் துறை

2015-16 ஆம் கல்வியாண்டில் வணிகவியல் துறையில் B.Com., B.Com (CA) மற்றும் B.Com (IB) ஆகிய பிரிவுகளில் 240 மாணவ மாணவிகளும், M.Com மற்றும் M.Com (IB) பிரிவுகளில் 80 மாணவ மாணவிகளும், ஜூலை 2015 Batch Ph.D., ஆராய்ச்சி பிரிவில் 2 பேர் முழு நேரமும், 10 பேர் பகுதி நேரத்திலும், நவம்பர் 2015 Batch PhD., ஆராய்ச்சி பிரிவுகளில் 5 பேர் முழு நேரத்திலும், 14 பேர் பகுதி நேரத்திலும் நவம்பர் 2015 M.Phil பிரிவில் 6 பேர் முழு நேரத்திலும் ஒருவர் பகுதி நேரத்திலும் சேர்ந்து உள்ளனர்.

பாரதியார் பல்கலைக்கழகத்தில் 19.7.15 முதல் 11.8.15 வரை நடைபெற்ற புத்தாக்கப் பயிற்சியில் வணிகவியல் துறைப் பேராசிரியர்கள் முனைவர் இரா.தனலட்சுமி, முனைவர் மு.கோப்பண்ணசாமி, முனைவர் R.சிவஞானசித்தி, முனைவர் N.டேவிட் சௌந்திரராஜன், முனைவர் இரா.நிர்மலாதேவி மற்றும் முனைவர் N.மல்லேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கேப்டன் முனைவர் பா.கனகராஜ் சிறந்த NCC அதிகாரியாக 4 (BN) NCC சார்பாக பாராட்டப்பட்டுள்ளார்.

இக்கல்வியாண்டில் முனைவர் M.கோப்பண்ணசாமி அவர்களிடம் வேலைவாய்ப்பு அலுவலர் பொறுப்பு கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியக்குழுவின் (OBC) இதர பிற்படுத்தப்பட்டோர் உயர்கல்வி உதவித்தொகை மாதம் ரூ. 24000 வீதம் ஆர்.சங்கீதா என்ற Ph.D முழுநேர மாணவிக்கு இரண்டு ஆண்டுகளுக்குக் கிடைத்துள்ளது.

III B.Com (IB) யில் படிக்கும் 12 மாணவ மாணவிகளுக்கு திருப்பூர் SCM நிறுவனத்தில் வேலைவாய்ப்பு ஆணை கொடுக்கப்பட்டுள்ளது.

பாரதியார் பல்கலைக்கழக ஏப்ரல் 2015 B.Com (IB) பிரிவில் S.ரஞ்சிதா முதல் நிலையும், M.முருகப்பன் இரண்டாம் நிலையும், M.Com (IB) பிரிவில் S.நூருல்முபாசிரின் ஒன்பதாவது நிலையும் பெற்றுள்ளனர்.

12.010.2015ல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனைவருக்கும் உயர்கல்வி என்ற கருத்தரங்கில் முனைவர் G.B.கார்த்திகேயன் மற்றும் முனைவர் G.சந்திரசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வணிகவியல் துறையில் First Batch M.Phil முழுநேரம் முடித்த 16 பேருக்கும் பகுதி நேர பிரிவில் 2 மாணவர்களும் வாய்மொழித் தேர்வு முடிந்து M.Phil பட்டம் பெற்றுள்ளனர்.

Ph.D பகுதிநேர பிரிவில் முனைவர் G.சந்திரசேகரன் மற்றும் முனைவர் G.B.கார்த்திகேயன் ஆகியோரின் வழிகாட்டுதலில் 5 மாணவ, மாணவிகள் வாய்மொழித் தேர்வு முடிந்து Ph.D பட்டம் பெற்றுள்ளனர். Dr.M.கோப்பண்ணசாமி 3,4 மார்ச் 2016ல் பாரதியார் பல்கலைக்கழகத்தின் International Property Rights என்ற தலைப்பில் நடைபெற்ற தேசியப் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொண்டார். 12.2.2015 அன்று வணிகவியல் மன்றத் துவக்கவிழா முதல்வர் முனைவர் கு.சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில், சிறப்பு விருந்தினராக ஆடிட்டர் K.P.கோபிநாத் அவர்கள் கலந்து கொண்டு

சிறப்புரையாற்றினார். மேலும் விழாவில் பேராசிரியர் K.புஷ்பலதா வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் B.குணசேகரன் சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். இறுதியாக முனைவர் R.ஜெயச்சந்திரன் நன்றி கூறினார்.

இக்கல்வியாண்டில் வணிகவியல் துறையிலிருந்து பேரா.V.தியாகராஜன் (2.11.2015), முனைவர் கீ.கஸ்தூரிமீனா (22.6.2015) மற்றும் முனைவர் R.நிர்மலாதேவி (17.02.2016) ஆகியோர் பணியிடப் பெயர்வு பெற்று வேறு கல்லூரிகளுக்குச் சென்றுள்ளனர். முனைவர் M.வாணிஸ்ரீ 27.7.2015 அன்று புதிதாக இத்துறைக்கு பன்னாட்டு வணிக உதவிப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்துள்ளார்.

## நூலகத்துறை :

பல ஆண்டுகளாக நூலகர் பணியிடம் நிரப்பப்படாத நிலையில் நூலகராக முனைவர் ஆ.சித்ரா தவப்புதல்வி அவர்கள் பணி நியமனம் பெற்று நூலகத்தை கணினி மயமாக்கியுள்ளார். ஆயிரக்கணக்கான பல்வேறு புத்தகங்களுடன் வார, மாத நாளிதழ்களும் மாணவர்கள் நலனுக்காக வரவழைக்கப்படுகின்றன.

## உடற்கல்வித் துறை

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் இரா.செங்கமுத்து உடற்கல்வி இயக்குனராக பொறுப்பு வகித்து வருகிறார். பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று இக்கல்லூரி மாணவ மாணவியர் பல்வேறு பரிசுகளையும், விருதுகளையும் பெற்று இக்கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர். தேசிய அளவிலும், மாநில அளவிலும் இக்கல்லூரி மாணவ மாணவியர் போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர்.

## தேசிய மாணவர் படை (NCC)

கடந்த ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் நமது கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ, மாணவியர் பல்வேறு முகாம் மற்றும் சமூக விழிப்புணர்வுப் பேரணிகளில் கலந்து கொண்டனர்.

தால்சானிக் பயிற்சி முகாம் பரமத்தி வேலூரில் உள்ள கந்தசாமிக் கண்டர் கல்லூரியில் 22-மே-2015 முதல் 1-ஜூன்-2015 வரையும் மற்றும் 3 ஜூன் 2015 முதல் 15 ஜூன் 2015 வரையும் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியை சார்ந்த 6 மாணவர்கள் கலந்து கொண்டனர். கோவையில் உள்ள பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் 13 ஜூன் 2015 முதல் 15 ஜூன் 2015 வரையும் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சார்ந்த 6 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உலக யோகா தின முகாம் 20 ஜூன் 2015 முதல் 25 ஜூன் 2015 வரை கோவை பி.எஸ்.ஜி தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த

மாணவ மாணவியர் 45 பேர் பங்கேற்றனர்.

கோவையில் உள்ள கற்பகம் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் குடியரசு தின அணிவகுப்பிற்கான மாணவ, மாணவியர் தேர்வு முகாம் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த 3 மாணவர்கள் பங்கேற்றனர்.

சர்வீஸ் செலக்சன் போர்டுக்கான (SSB) நேர்முகத் தேர்வு கோவையில் உள்ள தேசிய மாணவர்படை அலுவலகத்தில் 4 செப்டம்பர் 2015 அன்று நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த 2 மாணவர்கள் பங்கேற்றனர்.

மண்டலங்களுக்கு இடையிலான தேசிய மாணவர்படைப் போட்டிகள் திருச்சியில் உள்ள பெல் (BHEL) முகாமில் நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சேர்ந்த தேசிய மாணவர்படை அதிகாரி கேப்டன் முனைவர் B.கனகராஜ் குழுவின் தலைவராகவும் மற்றும் 3 மாணவர்களும் கலந்து கொண்டனர். இம்முகாம் 25 செப்டம்பர் 2015 முதல் 4 அக்டோபர் 2015 வரை நடைபெற்றது.

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் உள்ள சி.பி.ஏ கல்லூரியில் குடியரசு தின அணிவகுப்பு பயிற்சி முகாம் 26 அக்டோபர் 2015 முதல் 5 நவம்பர் 2015 வரை நடைபெற்றது. இதில் நம் கல்லூரியைச் சார்ந்த இளநிலை இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவர் கௌதம் கலந்து கொண்டார்.

19 டிசம்பர் 2015ம் தேதியன்று புகையிலை எதிர்ப்புப் பேரணியை நமது கல்லூரி தேசிய மாணவர்படை மாணவ, மாணவியர் ஏற்பாடு செய்திருந்தனர். இதில் திருப்பூரைச் சார்ந்த கல்லூரி மற்றும் பள்ளியைச் சார்ந்த 300 தேசிய மாணவர்படை மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இப்பேரணியை நமது கல்லூரி முதல்வர் முனைவர். கு.சண்முகசுந்தரம் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்திய இராணுவத்துடன் இணைந்து செயல்படும் முகாம் ஹைதராபாத்தில் 8 பிப்ரவரி 2015 முதல் 26 பிப்ரவரி 2015 வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரியைச் சார்ந்த 10 தேசிய மாணவர்படை மாணவர்கள் கலந்து கொண்டனர். இம்முகாமில் நடைபெற்ற அணிவகுப்புப் போட்டியில் முதல் பரிசை வென்று வந்தனர்.

கோவையில் உள்ள எஸ்.என்.எஸ் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற தேசிய மாணவர்படை விழாவில் நமது கல்லூரியைச் சார்ந்த 15 மாணவ, மாணவியர் கலந்து கொண்டனர். இதில் நடைபெற்ற அணிவகுப்புப் போட்டியில் நான்காவது இடத்தைப் பெற்று வந்தனர்.

25 பிப்ரவரி 2016ம் தேதி அன்று கோவையில் உள்ள பி.எஸ்.ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் இந்த ஆண்டிற்கான பாராட்டு விழா நடைபெற்றது. இதில் சிறந்த தேசிய மாணவர்படை அதிகாரியாக நமது கல்லூரியைச் சார்ந்த NCC கேப்டன் B.கனகராஜ் தேர்வு செய்யப்பட்டார். மற்றும் இளநிலை இரண்டாமாண்டு வேதியியல் துறை மாணவர் கௌதம், கனிணி அறிவியல் துறையைச் சார்ந்த குரு மற்றும் வரலாற்றுத் துறையைச் சார்ந்த கார்த்திக் சிறந்த NCC மாணவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தூய்மை இந்தியா திட்டம், சர்தார் வல்லபாய் படேல் பிறந்தநாள் மற்றும் இரத்ததான முகாம் ஆகியவற்றில் நமது கல்லூரி தேசிய மாணவர்படை மாணவ, மாணவியர் திரளாகப் பங்கேற்றனர்.

## நாட்டு நலப்பணித் திட்டம் (NSS)

வேதியியல் உதவிப் பேராசிரியர் முனைவர் எஸ்.பி.ராஜாசிங், விலங்கியல் உதவிப்பேராசிரியர் முனைவர் ஆ.மோகன்குமார், இயற்பியல் உதவிப் பேராசிரியர் வி.செந்தில்குமார், ஆடை வடிவமைப்புத் துறை உதவிப் பேராசிரியர் செல்வி. எஸ்.கோகிலவாணி ஆகியோரைத் திட்ட அலுவலர்களாகக் கொண்ட நான்கு அலகுகள் இக்கல்லூரியில் உள்ளன. கல்லூரி வரலாற்றில் முதன் முறையாக இவ்வாண்டு உலகப் பன்னாட்டு இணையத்தளத்தில் நமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்டம் (சநந) முதன் முதலாக இடம் பெற்றுள்ளது.

## வேலை வாய்ப்புத் துறை

வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் எம்.கோப்பண்ணசாமி வேலைவாய்ப்பு அலுவலராகப் பொறுப்பு வகிக்கிறார். தனியார் துறைகளில் வேலைவாய்ப்பையும், அரசுத்துறைகளில் போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சியையும், வழிகாட்டுதலையும் இத்துறை வழங்கி வருகிறது.

## பசுமை சுற்றுச்சூழல் இயக்கம் (ECO Club)

பசுமை சுற்றுச்சூழல் இயக்கம் எதிர்காலத் தலைமுறையினரிடம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உருவாக்குவதில் ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றது. ஏனென்றால் வெளி மூச்சுக் காற்று தான் மரங்களின் உள்மூச்சு. மரங்களின் வெளிமூச்சு தான் நமது உள்மூச்சு. இதை யாராலும் மறைக்கவும் முடியாது, மறுக்கவும் முடியாது. அது இல்லாமல் வாழவும் முடியாது. இடைவிடாது நடக்கும் உறவு இது. இந்த உறவினை வலுப்படுத்தும் நோக்கில் இக்கல்லூரியில் பசுமை சுற்றுச்சூழல் இயக்கத் துவக்கவிழா 26.02.16 அன்று நடைபெற்றது. இவ்வியக்கத்தின் ஒருங்கிணைப்பாளராக முதுநிலை விலங்கியல் மற்றும் ஆராய்ச்சித்துறையின் உதவிப் பேராசிரியர் முனைவர் B.மோகன்குமார் பொறுப்பேற்றார்.

இவ்வியக்கத்தின் இந்த ஆண்டின் முதல் நிகழ்ச்சியாக 13.06.2015ம் தேதியன்று திருப்பூர் காலேஜ் ரோட்டிலிருந்து வஞ்சிபாளையம் வரை 2,500 மரக்கன்றுகள் வெற்றி அமைப்புடன் இணைந்து சாலையோரங்களில் நடப்பட்டன. பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணாக்கர்கள் மெஜஸ்டிக் பூங்காவிலும், கல்லூரிக்கு அருகே உள்ள சோளிபாளையம் கிராம புரங்களிலும், திருப்பூர் எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலைக் கல்லூரியிலும் மற்றும் புதிய திருப்பூரில் உள்ள தொழில்துறை வளாகங்களிலும் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

இவ்வமைப்பின்கீழ் வேம்பு, நிலவேம்பு, புளியமரம், ஆலமரம், அரசமரம், பூவரசு, இலுப்பை, மந்தாரை போன்ற பல்வேறு வகையான மரக்கன்றுகள் சிறப்பாக நடவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் 02.01.2015ம் தேதியன்று உலகக் காடுகள் தினத்தை முன்னிட்டு பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணவ மாணவிகள் வனத்தைப் பாதுகாக்கும் நோக்கில் திருப்பூர் அருகே உஷா திரையரங்கிலிருந்து தாராபுரம் ரோடு வழியாக வித்யா கார்த்தி கல்யாண மண்டபம் வரை பேரணியில் கலந்து கொண்டு பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர். இந்நிகழ்ச்சியில் தமிழக வனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.M.S.M.ஆனந்தன் அவர்களும், திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கு.கோவிந்தராஜ் அவர்களும், திருப்பூர் மாநகர மதிப்பிற்குரிய துணைமேயர் சு.குணசேகரன் அவர்களும், மற்றும் திருப்பூர் மாவட்டக் காவல்துறை துணை ஆணையர் திரு.த.திருநாவுக்கரசு அவர்களும் பேரணியைத் தொடங்கி வைத்து நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினர்.

அதைத் தொடர்ந்து மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் Dr.A.P.J.அப்துல்கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் Dr.V.பொன்ராஜ் அவர்கள் பசுமை சுற்றுச்சூழல் இயக்கத்துடன் இணைந்து கல்லூரி வளாகத்தில் மரக்கன்றுகளை நடவு செய்து நிகழ்ச்சியை சிறப்பித்தார். மேலும் 10.10.2015ம் தேதியன்று பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணவ மாணவிகள் மன ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு திருப்பூர் புதிய பேருந்து நிலையம் அருகே பொதுமக்களிடையே மனநல சுகாதாரப் பிரச்சினை தொடர்புடைய விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

15.10.2015ம் தேதியன்று முன்னாள் குடியரசுத்தலைவர் Dr.A.P.J.அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இளைஞர்களின் எழுச்சிதினம் கடைப்பிடிக்கப்பட்டு அத்தினத்தைக் கொண்டாடும் வகையில் பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணவ, மாணவிகள் திருப்பூர் பழைய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பேரணியில் திரளாகக் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழக வனத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.M.S.M.ஆனந்தன் அவர்களும், திருப்பூர் மாநகர மாவட்ட ஆட்சியர் திரு.கு.கோவிந்தராஜ் அவர்களும், திருப்பூர் மாநகரத் துணைமேயர் சு.குணசேகரன் அவர்களும் மற்றும் திருப்பூர் மாநகரகக்காவல்துறை ஆணையர்.திரு.த.திருநாவுக்கரசு அவர்களும் பேரணியைத் தொடங்கி வைத்தனர்.

30.10.2015ம் தேதியன்று "தூய்மையான பாரதம்" திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் சுற்றுச்சூழல் இயக்க மாணாக்கர்கள் திருப்பூர் இரயில் நிலையத்தில் தூய்மை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தினர். இரயில்வே அதிகாரி திரு.குயிலன் அவர்கள் இந்நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார்.

30.10.2015ம் தேதியன்று லஞ்ச ஒழிப்பு விழிப்பணர்வு நிகழ்ச்சி இக்கல்லூரியின் குமரன் அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பசுமை சுற்றுச்சூழல் மாணாக்கர்களும், பேராசிரியர்களும் கலந்து கொண்டனர். இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக திருப்பூர் மாநகர காவல்துறை ஆணையர் திரு.S.N.சேஷாய் கலந்து கொண்டு

மாணாக்கர்களிடையே லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் சொற்பொழிவாற்றினார்.

தினமலர் நடத்திய "நம்ம ஊரு துள்ளி விளையாடு நிகழ்ச்சி" 01.11.15ம் தேதியன்று திருப்பூரில் உள்ள P.N.ரோட்டில் நடைபெற்றது. இதில் பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணாக்கர்கள் கலந்து கொண்டனர்.

மேலும் இக்கல்லூரியின் வனப் பரப்பு மற்றும் மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்து பசுமைப் போர்வையை மேம்படுத்தும் உன்னத நோக்கில் கலாமின் கனவை நனவாக்கும் வகையில் கலாம் கனவுப்பூங்கா 01.11.2015ம் தேதியன்று உதயமானது.

இப்பூங்காவிற்கு சிறப்பு விருந்தினராக திரு.த.திருச்செந்தூரன் மற்றும் திருப்பூர் மாநகரக் காவல்துறை துணை ஆணையர் திரு.த.திருநாவுக்கரசு கலந்து கொண்டு மரக்கன்றுகளை நடவு செய்து மரம் நடும் விழாவினைத் தொடங்கி வைத்துச் சிறப்பித்தனர். இவ்விழாவில் பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணவ மாணவிகளால் 1000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு இன்றுவரை பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும் தமிழகத்தில் எந்த ஒரு அரசுக் கல்லூரியிலும் கலாமின் கனவுப்பூங்கா அமைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மரம் நடும் விழாவில் மத்திய, மாநில அரசு ஊழியர்கள், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், தொழில் அதிபர்கள் மற்றும் ரோட்டரி Lions Club ஐச் சேர்ந்த அன்பர்கள் மரங்களை நடவு செய்தனர்.

25.11.15ம் தேதியன்று மதநல்லிணக்க நிகழ்ச்சி இக்கல்லூரியின் AV கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வகுப்பு ஒற்றுமையைப் பற்றி சிறப்பாக விளக்கிய தேசிய மாணவ, மாணவியருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் கு.கோவிந்தராஜ் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

13.12.2015ம் தேதியன்று வனத்துக்குள் திருப்பூர் நிறைவு விழா வேலாயுதசாமி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இம்மண்டபத்தில் மரம் நடுதல் பணியை சிறப்பாக செய்து முடித்தமைக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பசுமை சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பாளர் (Eco Club Co-ordinator) Dr.A.மோகன்குமார் அவர்களுடன் பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணாக்கர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

திருப்பூர் மாவட்டத் தடகள சங்கம் சார்பாக மிக பிரமாண்டமான Tamilnadu Cross Country Race - 2015 சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரியில் 20.12.2015 அன்று சிறப்பாக நடைபெற்றது. அதில் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி பசுமை சுற்றுச் சூழல் இயக்க மாணவர்கள் அதிகாலை 4.30 மணிமுதல் தன்னார்வத் தொண்டர்களாக (Volunteers) ஆகப் பணியாற்றினார்கள். அந்த நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக வந்த முன்னாள் காவல் அதிகாரி ஸ்ரீ W.I.தேவாரம் IPS அவர்களும், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை சாமர்த்தியமாகக் கையாண்டு காவல் துறைக்கு நம்பிக்கை ஏற்படுத்திய தமிழக கடலோரக் காவல் படை ADGP Dr.C.சைலேந்திரபாபு அவர்களும் பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணாக்கர்களைப் பாராட்டினார்கள்.

27.12.2015ம் தேதியன்று இக்கல்லூரியின் பசுமை சுற்றுச்சூழல் இயக்க மாணாக்கர்களால் Lions Club உடன் இணைந்து ஒரு நாள் மருத்துவ முகாம் கல்லூரி வளாகத்தில் காலை 6.00 மணி அளவில் சிறப்பாக நடத்தப்பட்டது. கல்லூரி மைதானத்தில் நடைபயிற்சி செய்பவர்களுக்கும், பொதுமக்களுக்கும் அந்நிகழ்ச்சியில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மேற்குறிப்பிட்ட அனைத்து நிகழ்ச்சிகளும் இக்கல்லூரியின் முதல்வர் மதிப்பிற்குரிய முனைவர் K.சண்முகசுந்தரம் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றன.

## மகளிர் மன்றம் :

மகளிர் மன்ற ஒருங்கிணைப்பாளராக கணினி பயன்பாட்டியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் கோ.மு.நசீரா செயல்பட்டு வருகிறார். ஆகஸ்ட் முதல் வாரம் உலக தாய்ப்பால் ஊட்டும் வாரத்தை முன்னிட்டு (World Breast Feeding Week) இக்கல்லூரியில் முதல்வர் தலைமையில் அரசு மருத்துவர் டாக்டர் பிரபா அவர்கள் கலந்து கொண்டு மாணவிகளிடையே தாய்ப்பாலின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார். இது குறித்து மாணவிகளிடையே வினாடி வினா நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.

07.02.2016 அன்று ஸ்ரீபுரம் அறக்கட்டளையின் மூலம் திருப்பூரில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் ஆஇஅ மற்றும் ஆ.இர்ம் ஐஆ மாணவியர்கள் 50 பேர் பங்கேற்றனர்.

நிறைவாக இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு காரணமாக இந்த ஆண்டு முக்கியமான சில பணிகள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக மெஜஸ்டிக் நிறுவன உரிமையாளர் கந்தசாமி அவர்கள் ரூ. 3.5 லட்சம் மதிப்பில் மாணவர்கள் இரண்டு சக்கர வாகனம் நிறுத்துவதற்கான நிழற்குடை அமைத்துத் தந்துள்ளார்.

வனத்துக்குள் திருப்பூர் அமைப்பின் மூலம் கல்லூரி வளாகத்தில் சுமார் 1500 மரக்கன்றுகள் நடப்பட்டு அவற்றிற்கு தினமும் தண்ணீர் ஊற்றி பராமரித்து வருகிறார்கள்.


வாக்கிங் கிளப்பின் தலைவர் கண்ணன் சார்பாக கல்லூரியின் முன்புறமாக உள்ள மரங்களுக்கு தண்ணீர் ஊற்றி பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதே போல க்ரீன் அன் க்ளீன் அமைப்பாளர் செந்தில் மற்றும் அவரது அமைப்பைச் சேர்ந்தவர்களும் மரக்கன்றுகளை நட்டுப் பராமரித்து வருகின்றனர்.

பணி நிறைவு பெறும் பேராசிரியர்

**மு.கல்யாணசுந்தரம்** M.Sc., M.Phil, Ph.d.,












## தாய்மை



"தாய்மையின் வலி என்னவென்று
எனக்குத் தெரியும், அதனால் தான்
அவளோடு சேர்ந்து நானும் அழுதேன்
"அன்று நான் பிறந்த போது!"

**C.ஹேமாவதி**
II B.Sc (Maths)

## உண்டாக்குவோம் சாதியற்ற சமூகம்!

ஆதி இறைவன் வகுத்ததுவே
ஆதாமும் ஏவாளும்!
பாதி வழியில் வந்ததுவே
வாதமும் சண்டையும்!

உண்டானது பீதி
உருவானது சாதி

ரிக் சொல்லிய வருணா ஷிரம்
அதனால் தான் எத்தனை சிரமம்?
பிராமண சத்ரிய வைசிய சூத்திரம்
பிறரை சதி செய்ய வந்தது சூத்திரம்!

பிறந்தார்கள் தேவர்களாக
பிரிவினையை நீக்குவதற்காக!
புத்தர், வீரர் (மகாவீரர்)
இயேசு, கான்பூசியசு,
வாடிய மக்கள் ஓடி...!
வந்தார்கள் விடியலைத்தேடி!
நீதி போதனைகள் செய்தார் ஔவை
உண்டென ஈதலோன் மேல்சாதி
இல்லென உரைப்பவன் கீழ்ச்சாதி

நீதிக் கட்சியாக பெரியார்
சாதிகள் இல்லையடி பாப்பா
என்று பாடிய பாரதியார்!
இம்மட்டும் எத்தனை சண்டை?
எத்தனை இரத்தம்?
எத்தனை வேதனை?
இத்தனையும் இச்சாதியால்

இம்மட்டும் எத்தனை வருத்தம்!
எத்தனை சீர்திருத்தம்!
இத்தனை செய்தும், இனியும் உண்டு!
நீங்க வேண்டுவது உண்டு...

கல்வி யறிவைப் புகட்டுவோம்...!
மனம் மாறிய மனிதனின்
மனதை மனம் மாற்றுவோம்!
நம் நாடு விழிக்கப் போராடுவோம்...
ஒற்றுமை பெருகவே
உண்டாக்குவோம் சாதியற்ற சமூகம்....

**ரா.சண்முகம்**
இளம் அறிவியல் இயற்பியல்
2ஆம் ஆண்டு

**இலக்கு**

சிரிப்பவர்கள் எல்லாம்
கவலைகள் மறந்தவர்கள் அல்ல...!
கவலைகளை மறக்கத் தெரிந்தவர்கள்

அனுபவ வார்த்தைகள்
ஆழம் அறியாது
கடப்பதால் கால்கள்
தவறி விழுகையில்
தெளியும் அறிவில்
நஷ்டம் தவிர
தேறுவது வேறில்லை

பழுதுபோன விழிகள்
அழுது தீர்த்த கரையாய்
மூளைக்கு எட்டவில்லை
எல்லாம் முடிந்த பின்னே
கரைகிறது என் கனவு

பல நேரம் தனிமையில்
சில பக்கத் தாள்களை
நிரப்ப என் எழுதுகோல்
கண்ணீர் கொண்டு நிரப்புகிறேன்

வெற்றியை சிந்தனையாக வை!
சிந்தனையை நோக்கத்தோடு வை!
நோக்கத்தை கவனத்தில் வை!
கவனத்தை உன் படிப்பில் வை!

K.Lakshmanan
II BA Eng.Lit

**தன்னம்பிக்கை**

நண்பனே!
நேற்று என்பது
முடிந்துவிட்டது!
நாளை என்பது
இனிவரும் நாள்!
இன்று என்பது
உன் கையில்!

எதிர்மறை எண்ணங்களை - உன்
மனதிலிருந்து நீக்கிவிடு!
வெற்றி அடைவேன் என்பதை
மட்டும் நினைத்துக் கொண்டேயிரு!

வெயில் உள்ளவரை மட்டுமே
உன் நிழல்கூட உன்னைத்
தொடர்ந்து வரும் - ஆனால்
உன்னை விடாமல் பற்றிக்கொண்டு
வாழ்க்கையில் முன்னேற முடியுமென்று
சிந்திக்க வைக்கும் "மூன்றாவது கை" தான்
தன்னம்பிக்கை!

பெரிய மரம் வளர
சிறிய விதையே காரணம் - அதுபோல்
உன்னுடைய சிறிய முயற்சி கூட
பெரிய வெற்றியாக மாறலாம்
எனவே மூடநம்பிக்கையை மறந்திடு
தன்னம்பிக்கையை வளர்த்திடு!

R.செந்தில்மோகன்
II BA Eng.Lit

# ஞாபகமில்லை




திங்களன்று பார்த்தேன்
திரும்பிப் பார்த்தாள்!
செவ்வாயன்று பார்த்தேன்
செவி மடுத்தாள்!
புதனன்று பார்த்தேன்
புன்னகை புரிந்தாள்!
வியாழனன்று பார்த்தேன்
விழி அசைத்தாள்!
வெள்ளியன்று பார்த்தேன்
வெட்கப்பட்டாள்!
சனியன்று பார்த்தேன்
சரி என்று சொன்னாள்!
ஞாயிறன்று பார்த்தேன்
ஞாபகமில்லை என்று சொல்லிவிட்டாள்...!

**N.Vivekananthan**
II B.Sc Zoology
(2014 - 2017)

# வீரமுழக்க வேந்தர் விவேகானந்தர்



வீரத்தை வழியினிலும் வேதத்தை மொழியினிலும்
ஈரத்தை விழியினிலும் ஏந்திய பெருந்தகையே!
குரலுக்கு உயிர்தந்த குருவே!
குருநாதரின் திருவருள் பெற்ற குவலயமே!
வையகம் வழங்கிய அருளமுதே!
வங்கத்தாயின் ஒளிவயிரமே!

வங்க மணி அருளிய முழக்கம்!
அது வாழ்விற்கே பெருவிளக்கம்!
எத்திசையும் புகழ் மணக்க இன்றும் விளங்குகிறதே!
விந்தையிலும் விந்தையென நிற்கின்றதே!


காவி உடையணிந்த கருணையே!
கம்பீர நடை நடந்த சிங்கமே!
கேளாத காதுகளையும் கேட்கச் செய்த ஒலியே!
சகிப்பதுவே பெருமையெனச் சாற்றியதோர் களஞ்சியமே!
ஆன்மீகச் சுடரே, முழங்கு கடல் கடந்து சென்ற முத்தே!
உம்மைப் போற்றிப் புகழ வார்த்தையே இல்லை
ஆன்மீக தீபத்தைப் புகழ்பாட எனக்கு வயதும் இல்லை...!

**த.கோகிலப்பிரியா**
பி.ஏ., ஆங்கில இலக்கியம்
மூன்றாமாண்டு

## "Hard work is Medicine of Impossible time"

தோல்வியைக் கண்டு மனதை இழந்துவிடாதே...
அது உன்னைக் கோழையாக்கிவிடும்
உன் மதிப்பை உயர்த்து. அது தான்
உன் வெற்றிக்கு வழிகாட்டும்...!
நாம் போகின்ற பாதை தெரியாமல்
இருந்தாலும்,
வழி காட்ட ஒரு பாதை உள்ளது
அது, நம் ஆசிரியர்களே...!

வெற்றியைத் தேடிப் போகும்
பாதையில் தோல்வியைக் கண்டாலும்....
தோல்வியில் இருந்து வெற்றிக்கென்ன
கண்டாய் என்று பார்!
வெற்றி உன் கையில்...!



**ப.சரத்குமார்**
பி.ஏ. ஆங்கில இலக்கியம்,
இரண்டாமாண்டு

## என் ஒவ்வோர் அசைவிலும் என் அம்மா



"உன் உயிர் கொடுத்து
எனக்கு உயிர் கொடுத்தாய்"
"உன் இரு கைகளால்
என்னை அணைக்கச் செய்தாய்"
"உந்தன் செவ்விதழால்
எனக்கு முத்தமிட்டாய்"
"உன் அன்பை அளவில்லாமல்
என்னிடம் அள்ளிக் கொடுத்தாய்"

"நிலாவைக் காட்டி கதையைச் சொல்லி
என் பசியை ஆற்றினாய்"
"உன் கைக்குள் என் விரலைக்
கோர்த்து மலர் போன்ற"
"என் பாதங்களை அடியெடுத்து
வைக்கச் செய்தாய்"

"என் மழலைச் சொல் கேட்க
வாயசைத்துப் பேசச் செய்தாய்"
"உன் உறக்கத்தைத் தொலைத்து
என்னை உறங்கச் செய்தாய்"
"எனது முதல் கடவுளே
என் அம்மா"

**S.திவ்யா**
பி.ஏ ஆங்கில இலக்கியம்

| Application | Meaning |
|---|---|
| **E-Mail** | Messages distributed by electronic means from one computer user to one or more recipients via network. |
| **Facebook** | Facebook is a social networking website that makes it easy for you to connect and share with your family and friends online. |
| **WhatsApp** | WhatsApp Messenger is a cross-platform mobile messaging application which allows you to exchange messages without having to pay for SMS. WhatsApp Messenger is available for iPhone, BlackBerry, Android, Windows Phone and Nokia. |
| **Twitter** | Twitter is a free social networking micro blogging service that allows registered members to broadcast short called tweets. |
| **Skype** | Skype is an application that provides video chat and voice call service. Users may exchange such digital documents as images, text, video and any others, and may transmit both text and video messages. Skype allows the creation of video conference. |
| **YouTube** | YouTube is a free video sharing website that makes it easy to watch online videos. |
| **Vine** | Vine is a popular video-sharing application for smart phones, and there are a few things that make it unique. |
| **Instagram** | Instagram is an online mobile photo - sharing, video - sharing, and social networking service that enables its users to take pictures and videos, and share them either publicly or privately on the app, as well as through a variety of other social networking platforms, such as Facebook, Twitter, Thmblr, and Flickr. |
| **Flickr** | Flickr (pronounced "flicker) is an image hosting and video hosting website and web services suite that was created by Ludicorp in 2004 and acquired by yahoo in 2005. |
| **Smart Phone** | A mobile phone that performs many of the functions of a computer, typically having a touch screen interface, Internet access, and an operating system capable of running download apps. |
| **Webcam** | A Webcam is a video camera that feeds or streams its image in real time to or through a computer to computer network. When "captured" by the computer, the video stream may be saved, viewed or sent on to other networks via systems such as the internet, and email as an attachment. |
| **Scanner** | A Scanner is a device that captures images from photographic prints, posters, magazine pages, and similar sources for computer editing and display. |
| **Mobile app** | A Mobile app is a software application developed specifically for use on small, wireless computing devices, such as smartphones and tablets, rather than desktop or laptop computers. |

**R.Shankar**

Assistant Professor, Dept of Computer Science.



# COMPUTER

## Processor or Virtual Storage

| | |
|---|---|
| 1 Bit | = Binary Digit |
| 8 Bits | = 1 Byte |
| 1024 Bytes | = 1 Kilobyte |
| 1024 Kilobytes | = 1 Megabyte |
| 1024 Megabytes | = 1 Gigabyte |
| 1024 Gigabytes | = 1 Terabyte |
| 1024 Terabytes | = 1 Petabyte |
| 1024 Petabytes | = 1 Exabyte |
| 1024 Exabytes | = 1 Zettabyte |
| 1024 Zettabytes | = 1 Yottabyte |
| 1024 Yottabytes | = 1 Brontobyte |
| 1024 Brontobytes | = 1 Geopbyte |

## Disk Storage

| | |
|---|---|
| 1 Bit | = Binary Digit |
| 8 Bits | = 1 Byte |
| 1000 Bytes | = 1 Kilobyte |
| 1000 Kilobytes | = 1 Megabyte |
| 1000 Megabytes | = 1 Gigabyte |
| 1000 Gigabytes | = 1 Terabyte |
| 1000 Terabytes | = 1 Petabyte |
| 1000 Petabytes | = 1 Exabyte |
| 1000 Exabytes | = 1 Zettabyte |
| 1000 Zettabytes | = 1 Yottabyte |
| 1000 Yottabytes | = 1 Brontobyte |
| 1000 Brontobytes | = 1 Geopbyte |

**R.Shankar**
Assistant Professor,
Dept. of Computer Science

# IN JUST 24 HOURS

Heart beats for **1,03,689 Times**
Blood Travels for **1,68,000,000 Miles**
Man moves **750 Muscles**
Hair grows **0.1714 inch**
Nail grows **0.000466 inch**
we speak nearly **48,000 Words**
***All in 24 Hours!!!***



C.Hemavathi
II B.Sc (Maths)

## தூறல் விழும் நேரம்



நிலைகொண்ட வானில் நிலையில்லா மேகங்களே!
சிறகில்லாப் பறவைகளா நீங்கள்!
பல தேசம் சுற்றி வருகிறாய்!
பல உருவம் காட்டிப் போகிறாய்!
ஒரு வண்ணமா! ஓராயிரம் வண்ணங்களா!
வைகறைப் பொழுதிலே கரு நீலமா ?
எற்பாட்டிலே வெண்மை சூழ்ந்தவையா ?
மாலையிலே மகிழும் மஞ்சளா!
மழைக்காலங்களில் இருள் சூழும் கருமையே
உலகமே தவிக்கின்றது தண்ணீரின்றி
எங்கே ஒளிந்திருக்கிறாய் நீரே நீ

நீ நினைத்தால் உலக மக்களை வாட்டுகிறாய்..!
எண்ணினால் மானிடரை மிதக்க வைக்கிறாய்
சுட்டெரிக்கும் கோடை காலத்திலே
சற்றும் இரக்கம் இன்றி கீழே பார்த்து
நகைத்துப் போகிறாய்!
இத்தனை எடுத்துரைத்தும்
உன் செவிகளுக்கு எட்டவில்லையோ
நிற்காமல் செல்கிறாய் உன் பணிகளை எண்ணி!

**தா.பிரவீனா,**
பி.ஏ ஆங்கில இலக்கியம்
மூன்றாமாண்டு

## உடல் நலத்திற்கான உணவு வகைகள்

- கோதுமைக் கஞ்சி மற்றும் அரைத்த கோதுமையை சுடுநீரில் சேர்த்து குடித்து வந்தால் இருதயக் கோளாறு நீங்கும்.
- கறிவேப்பிலை, முருங்கைக் கீரையை உணவில் சேர்த்து வந்தால் இரும்புச் சத்து கிடைக்கும், முடி நன்கு வளரும்.
- தேங்காயுடன் கருப்பட்டியை சேர்த்து சாப்பிட்டால் பற்கள் உறுதியடையும். இருதயத்திற்கு நல்லது.
- கோதுமையை அரைத்து தீக்காயம் பட்ட இடத்தில் தூவி, தடவினால் காயம் குணமடையும்.
- வாழைத்தண்டை உணவில் சேர்த்து வர சிறுநீரகக் கற்கள் உடைந்து விடும்.
- இஞ்சி மற்றும் தேன் கலந்த மிளகை சாப்பிட்டு வர சளி நீங்கும்.
- தக்காளியில் உள்ள அதிகமான விதைகளைத் தவிர்த்தால் சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கலாம்.
- புதினா சாப்பிட்டு வர பசியைத் தூண்டும்.
- இஞ்சி ஜீரண சக்தியை அதிகரிக்கிறது.
- தொடர்ந்து நீண்ட நேரத்திற்கு விக்கல் எடுத்துக் கொண்டே இருந்தால் இரு காதிலும் பூண்டுப் பல்லை வைத்தால் சிறிது நேரத்தில் விக்கல் குறையும்.
- உணவில் அதிகமாக பூண்டை சேர்த்தால் அடிக்கடி விக்கல் ஏற்படுவது குறையும்.

**மு.மோனிஷா**
முதலாமாண்டு, இயற்பியல்

## மூட நம்பிக்கை

முன்னுரை :

நாட்டில் இன்றும் பல கிராமங்களில் நடக்கும் மூட நம்பிக்கைகளை இக்கட்டுரையில் காண்போம்.

உதாரணமாக,

ஒரு குடும்பத்தில் தம்பதியர்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு இரு மகன்கள் மற்றும் ஒரு மகள். மூத்த மகனின் பெயர் அன்பு. இளைய மகனின் பெயர் அரசு மற்றும் மகளின் பெயர் மல்லிகா. அந்தத் தம்பதியர்களில் கணவரின் பெயர் ராஜன். மனைவி பெயர் கமலம். இவர்களின் கதைதான் இது. இந்தத் தம்பதியருக்குச் சொத்து அதிகம். ஆனால் இவர்கள் சொத்துக்கள் அனைத்தையும் கோவிலுக்கு தானம் செய்தனர். இதனால் மகன்கள் இருவரும் இவர்களின் மீது கோபம் கொண்டு தங்கள் ஊரை விட்டு விரட்டினர். அந்த வயதான முதியோர்கள் ஊருக்கு எல்லையில் உள்ள மரத்துக்கடியில் நிழலில் அமர்ந்தனர். பனையபுரம்.

பிறகு பக்கத்து ஊரான பனையபுரத்தில் வசித்து வந்த கமலத்தின் தாய் வீட்டுக்கு கமலமும், கணவர் ராஜனும் சென்று நடந்தது எல்லாம் கூறி அங்கேயே அவர்களும் வசித்து வந்தனர். திடீரென்று கமலத்துக்கு உடல்நிலை மிகவும் மோசமானது. மறுநாள் காலையில் கமலம் இறந்து விட்டாள். இறந்த செய்தி கேட்ட மகன்கள் என் அம்மாவுக்கு நான் தான் கொள்ளி வைப்பேன் என்று கூறினர். அதற்கு ஊர்ப் பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். அவர்கள் உறவுக்காரர்கள் அன்புக்கும், அரசுக்கும் சாதகமாகப் பேசினர். பனையபுரம் பொது மக்களுக்கும் கமலத்தின் இரு மகன்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டது. முடிவில் இருவரும் அமைதி ஆயினர். கமலத்தின் இறுதிச்சடங்கு முடிந்து சடலத்தை சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று சடலத்தை இறக்கி வைத்தனர். கொள்ளி வைக்க யாராவது வாங்க என்று கூற, இரு மகன்களும் மறுத்து விட்டனர். அங்கு வந்த கமலத்தின் மகளான மல்லிகா என் அம்மாவுக்கு நானே கொள்ளி வைக்கிறேன் என்று தன் அம்மாவின் சடலத்திற்குக் கொள்ளி வைத்தாள். ராஜன், கமலம் இவர்களின் வாழ்க்கைக்கதை கூறும் செய்தி.

"தாய் வயிற்றில் பிறந்த மகன் மட்டுமல்ல மகள்
கொள்ளி வைத்தாலும் சடலம் எரியும்."

முடிவுரை :

இக்கட்டுரையில் கூறியது போல் நமது நாட்டில் இன்னும் பல கிராமங்களில் இருக்கும் மக்கள் இந்த மாதிரி மூடநம்பிக்கையில் சண்டையிட்டு வாழ்ந்து கொண்டுள்ளனர்.

தே.தேன்மொழி
B.Sc., (கணிணி அறிவியல்)
முதலாம் ஆண்டு

# அம்மா



கடவுளுக்கு நன்றி சொல்வேன்
ஏன் என்றால் - கடவுள்
படைத்த உயிரைக்கூட எதிரில்
காட்டுவதில்லை - என்
உயிரை உன் உருவத்தில்
காட்டியதற்கு...அம்மா!

அம்மா உன்னை நினைக்கிறேன்
என்னை எனக்குத் தெரியவில்லை
உன்னை மறக்க நினைக்கும் போது - என்னை
இழக்கிறேன் என்று நான் உணர்கிறேன்...

அன்பு அதிகம் இருந்தும் - அதை
வெளியே காட்ட முடியாமல் - ஆசைகள் பல
இருந்தும் வெளியே சொல்ல முடியாமல்
கருவில் என்னை சுமக்கும் தாயின்
பெருமையை மனதில் நினைப்பதே
சிறந்த மகிழ்ச்சி...

அம்மா உன்னை நினைத்துப் பார்த்தேன்
கண்களில் கண்ணீர் வந்தது.
உன்னை மறக்க நினைத்தேன் - என்
உயிர் பிரிய நினைத்தது...

பிறக்கும் போது ஒன்றும் கொண்டு
வரவில்லை - ஆனால்
இறக்கும் போது கொண்டு செல்வேன்
அம்மாவின் புகழை...

நான் கண்ணாடி பார்ப்பது - என்
முகத்தைப் பார்ப்பதற்காக அல்ல - தாயே
உன் முகம் என் கண்களில் இருப்பதற்காக...

மேகங்கள் மழை வரும் போது
கருமேகங்களாக இருக்கும்
மழை நின்று விட்டால் கருமேகம்
கரைந்து விடும் - ஆனால்
தாயின் பாசம் நம் உயிர் உள்ள வரை
கரைவதும் இல்லை! அழிவதும் இல்லை!

கருவறையில் இருக்கும் வரை
இருட்டில் இருந்த நான்
இன்று வெளிச்சத்தில் வந்து பார்க்கும் - என்
அம்மாவின் முகம்...!

கடவுளிடம் கை ஏந்தி கேட்கும் வரம்...
வந்த நாள் பல - ஆனால்
அம்மாவின் அன்பு
கடவுளின் வரத்தை விட மேலானது....

கலியுகத்தில் தெய்வங்கள்
கண்ணுக்குத் தெரிவதில்லை - என்று
ஞானிகள் சொல்கிறார்கள் - தாயே!
நீ என்னுடன் இருப்பது தெரியாமல்...

எத்தனை பிறவி எடுத்தாலும் - நாம்
தங்கியதற்கு வாடகை செலுத்த
முடியாத இடம்
தாயின் கருவறை....

நீ கனவில் கண்ட பெண்ணை விட
உன்னை கருவில் சுமந்த தாயை நேசி...

உயிருடன் ஒப்பிட முடியவில்லை
'என் தாயின் பாசம்' ஏனென்றால் - என்
உயிர் கூட ஒருநாள்
பிரிந்து விடும் என்பதால்....

உனக்கென உலகத்தில் யாருமே
இல்லாமல் இருக்கலாம் - ஆனால்
உன் தாய்க்கு நீயே
உலகம்...

**தே.தேன்மொழி**
பி.எஸ்.ஸி (கணினி அறிவியல்)
முதலாம் ஆண்டு

## திருப்பூர் – உழைப்பூர்

திருப்பூர பாருங்க தேன் கூடு போலங்க
தேடிவரும் எல்லோருக்கும் தேவஸ்தானம் தானுங்க
தேனீக்கள் போல மக்கள் சுறுசுறுப்பா உழைக்குது
நீரோட்ட நிலம்போல பசுமை முகத்தில் தெரியுது.

பனியன் தொழில் உற்பத்தியால் படிப்படியான சாதனை
பசி பட்டினி மறந்து இங்க பறக்கும்பாரு வேதன
பாடுபட்டா பலன் பலம் எல்லா நமக்குத்தா
இது மாறுபட்டா நாட்டுக்கும் நமக்கும் கஷ்டம்தா

இளைப்பாறும் நேரமும், இறைவன் தந்த இரவல்தான்
ஏத்துகிட்டா இரவல் கூட இனிய உதயம்தான்
இந்தியாவை வல்லரசாக்க இளைஞர்கூட்டம் துடிக்குது
இமைமூட மறந்து இரவை பகலாக நெனைக்குது.



குமரன் வாழ்ந்த ஊரு இது, கொடிகட்டி பறக்குது
குழப்பமில்லா நிலையிலிருந்து கோட்டையாக மாறுது
காற்றோட்டம் போல இங்கு காரோட்டம் உலவுது
போராட்ட நிலம நீங்கி தேரோட்டம் தெரியுது.

ஏரியாகக் காட்சியளிக்குது இந்த ஊரிலே
பல மாவட்ட மழைத்துளிகள் மகிழ்ச்சி காணுது
சிற்பச் சிட்டுகள் கைகள்பட்டு சிரிக்குது டி-சர்ட்

கப்பலேறி கடல் கடந்தும் காத்திருக்குது துட்டு
காலமெல்லாம் கிடைக்கும் இந்த பிரசாத லட்டு
கோடி கோடி பணம் வந்தாலும் நாடி கூடி வாழணும்
குழப்பமில்லா நிலையில் மனம் கோயிலாக மாறணும்.

சனிக்கிழமை பணப்புழக்கம் சரவெடி வெடிச்சா
திங்கட்கிழமை பணப்பைய பார்த்து பாவப்படணுமே
சந்தோஷத்தில் சிரிப்பொலிகள் ஜொலித்திட வேணும்
இந்த ஜொலிக்கும் சிரிப்பு நீடிச்சிருக்க சிக்கனம் வேணும்.

**ச.கார்த்திக்**
I M.Sc Physics

## பிரிவு

சிறகு இல்லாமல் பறந்தோம்
வண்ணத்துப் பூச்சியாய் வலம் வந்தோம்
வானவில்லாய்த் தோன்றும்

சில சண்டைகள் வண்ணங்களாக மாறும்
நண்பனின் சிறிய புன்னகையில்
மூன்று வருடமும் மூன்று நிமிடங்களாக
தோன்றியது


கலர் கலர் கனவுகளுடன்
காலங்கள் கடந்தது
முதல் இரண்டு வருடமும்
மெதுவாக விடிந்தாலும்
மூன்றாம் வருடம் பகலாகப் படர்ந்தாலும்
இப்போது விறகில்லாமல் எரிகிறோம்
பிரிவு எனும் தீக்குச்சியில்

## காண்பேனா....?

உடன்பாடு இல்லாமல்
உன்னோடு உடன்படிக்கை செய்து கொண்டேன்
பொய்யே பிடிக்காத நான்
பொய்யான உன்னோடு
பொய் வாழ்க்கை வாழ்கிறேன்.

என் உணர்வுகளுக்கு மரணமளித்து
என் உணர்வுகளுக்கு உயிர் கொடுக்கிறேன்.
உன்னுடைய பெயரின் எழுத்துக்களை
உணர்வோடு நான் எடுத்துக் கொண்டதால்

என் தலையெழுத்தையே மாற்றிவிட்டாய்
உன் நாவெனும் அஸ்திரத்தால்
தினம், தினம் என்னைப் பஸ்பமாக்குகிறாய்
என் உயிர் பிரிவதற்குள்
உன்னை, நான் விரும்பும்
நல்லவளாகக் காண்பேனா...?



## என்ன அழகு

கார்மேகம் கண்ணீரைப் பொழிய
மழைத்துளிகள் மண்ணை நோக்கிப் பாய்ந்திட
வெள்ளைப் பனித்துளிகளின்
ஸ்பரிசத்தால் அழகான பூக்களும்
மெய் சிலிர்க்குதே..!

பச்சைப் பட்டுடுத்திய கரையோர
பசுமை மரங்களின் இடையில்,
சல, சலவென சத்தமிட்டு
கரை புரளும் நதியின் அலைகள்
தென்றல் காற்றின் தித்திக்கும் தாளங்களுக்கு
நடனமாடும் தோகை மயில்கள்
ஸ்ருதி சேர்க்கும் சின்னக் குயில்கள்
ஆஹா என்ன அழகு இப்பூமி...!

## இயற்கை சாம்ராஜ்ஜியம்

விருதுகளின் விளிம்புகளில்,
கேள்விக்குறிகளின் தாக்கம்
பறவைகளின் பாராளுமன்றம்
வெறிச்சோடிக் கிடப்பது ஏன்?

இயற்கையின் அரசியல்
இடிந்து விழுந்து அழிந்ததோ!
பிரச்சாரம் செய்யும் குயில்கள் கூட்டம்
காணாமல் போனதை எண்ணி,
மேகங்களும் தேடுவதற்கு ஊர்வலமாய்ப்
போகிறதோ!

இயற்கையைத் தோற்கடித்த
மக்கள் கூட்டத்தை எண்ணித்தான்
வெட்கத்தில் தலை காட்டாமல்
மவுனம் சாதிக்கிறதோ மழைத்துளி!

**S.கார்த்திக்**
I M.Sc., Physics

## வெண்ணிலா

வெண்ணிலவே வெண்ணிலவே
வானத்து வெண்ணிலவே
உந்தன் அழகைச் சொல்ல - எனக்குச்
சொற்கள் கிடைக்கவில்லை

உன்னைப் பார்க்கும்போது
பூமித்தாய்க்குப் பொறாமையாக உள்ளது
அழகோ அறிவோ
உவமையோ உருவகமோ
கற்பனையோ உண்மையோ
உன்னையே பலவாறாக வருணிக்கின்றனர்.

எனது முன்வினைப் பயன்
நீ இரவில் மட்டும் வருகிறாய்
நீ பகலில் வந்தால் அனைவரும்
உன் அழகையே ரசிப்பார்கள்

உன்னை நோக்கிச் சுற்றுகிறேன்
என்னை விட்டு விலகுகிறாய்
இருட்டிலும் உன் அழகைக் காண
ஆவல் கொண்டேன் வெளிச்சத்துடன்
என் முன் வந்து நிற்கிறாய்


இரவில் வந்து என் மகிழ்ச்சியை அள்ளிக்கொண்டு செல்கிறாய்!
பகலில் உன்னைக் காணாமல் மறைந்து விளையாடுகிறாய்!



**சி.பத்மஶ்ரீ**
I B.Sc., Zoology

## தன்னம்பிக்கை

தன்னம்பிக்கை இல்லாதவனுக்கு
எந்தக் கடவுளையும் நம்பி
பயன் இல்லை
தன்னம்பிக்கை உள்ளவனுக்கு
எதைக் கண்டும் பயம் இல்லை
உன்னை நம்பு நீதான் உனக்குக் கடவுள்



**து.கதிர்வேல்**
பி.ஏ வரலாறு மூன்றாம் ஆண்டு

# நல்வழியில் பயணிப்போம்

ஒருவரிடம் வலிமை இருந்து, அதை நல்ல வழியில் பயன்படுத்தாமல் தீய வழியில் பயன்படுத்தினால் அவரின் முடிவு கடைசியில் அழிவே. ஆரம்பத்தில் இது நன்மைபோல் தோன்றினாலும் முடிவில் அது தீமையிலேயே முடியும்.

இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில் (1939-1945) ஹிட்லர் (ஜெர்மனி), முசோலினி (இத்தாலி), டோஜோ (ஜப்பான்) ஆகிய தலைவர்கள் உலகில் வலிமை மிக்க ஒருசில தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள். உலகையே தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர ஆசைப்பட்டு, சர்வதேசப் போர் விதிமுறைகளை மீறி வேண்டுமென்றே பிற நாடுகளுடன் போர் தொடுத்து கோடிக்கணக்கில் அப்பாவி மக்களைக் கொன்று குவித்தனர். ஆரம்பத்தில் இவர்களின் பயணம் வெற்றியை நோக்கிச் சென்றாலும், கடைசியில் அழிவே மீதமானது.

கடைசியில் மூவரின், மூன்று நாடுகளின் முடிவும் அழிவே. ஹிட்லர் தற்கொலை செய்து கொண்டார். முசோலினி கொல்லப்பட்டார். டோஜோ-வுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

உலகப்போரின் முடிவு, நேச நாடுகள் வென்றன; அச்சு நாடுகள் தோற்றன; "நன்மை வென்றது, தீமை அழிந்தது"

மேற்கண்ட செய்தி, நாடுகளுக்கும் தலைவர்களுக்கும் மட்டுமல்ல, ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பொருந்தும். ஒவ்வொருவரிடமும் வலிமையும், திறமைகளும் உள்ளன. நம்மிடம் உள்ள வலிமை, திறமை ஆகியனவற்றை பொறாமை, பேராசை, நேரத்தை வீணடித்தல், வீண் பேச்சுகள் பேசுதல், படிப்பு அல்லது பணியில் அக்கறையின்மை, சமுதாயம் வேண்டாம் என்று ஒதுக்கின செயல்களைச் செய்தல் போன்ற செயல்களுக்குப் பயன்படுத்தினால், தொடக்கத்தில் இது மகிழ்ச்சியாகத் தோன்றினாலும், நாட்கள் கடக்க அது தீமையையே கொடுத்து வாழ்வினைக் கடினமாக்கும் என்பது யாராலும் மாற்ற முடியாத உண்மை.

இச்செயல்கள் ஒருவழிச் சாலையில் (One way) பயணிப்பதைப் போன்றது; சென்றால் திரும்ப வருவது கடினம். இதை நாம் அன்றாட வாழ்க்கையில் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். இதனை விளக்க உதாரணம் தேவையில்லை.

எனவே, நல்வழிகளில் (சாலை அல்ல) பயணிப்போம். வாழ்வை இனிதாக்குவோம்.

ரா.சண்முகம்
II B.Sc Physics

# தேசப்பற்றாளர் அப்துல்கலாம்

**முன்னுரை :**

தமிழகம் தந்த தவப்புதல்வர்களுள் ஒருவர் நம் இந்திய நாட்டின் முன்னாள் குடியரசுத்தலைவர் அப்துல்கலாம். சாதாரண ஏழைக்குடும்பத்தில் பிறந்து தன் அயராத உழைப்பால் உலகம் போற்றும் விஞ்ஞானியாகத் திகழ்ந்தவர். இந்தியாவை முழு வளர்ச்சியடைந்த நாடாக மாற்ற வேண்டும் என்ற தணியாத ஆவல் கொண்ட தேசப்பற்றாளர்.

**பிறப்பும், இளமைக்காலமும் :**

தமிழகத்தில் உள்ள இராமேஸ்வரத்தில் 1931ஆம் ஆண்டு அக்டோபர் 15ஆம் தேதி அப்துல்கலாம் பிறந்தார். அவர் ஆரம்பக் கல்வி முதல் உயர்நிலைப் பள்ளி வரை இராமேஸ்வரத்தில் பயின்றார். சென்னையில் பொறியியல் படிப்பை முடித்தார். கல்வி கற்கும் காலத்திலேயே சாதிக்கும் ஆசையையும், இந்திய நாட்டின் வளர்ச்சியைப் பற்றிய லட்சியத்தையும் கொண்டார்.

**கலாம் வகித்த பதவிகள் :**

கலாம் தொடக்கத்தில் விமான உற்பத்தி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்தார். அங்கு நந்திஜெட் விமானத்தை உருவாக்கினார். விண்வெளித்துறையில் இருந்து அணுஆராய்ச்சிக்கு இடம் மாறி அங்கும் மிகப்பெரிய வெற்றி பெற்றார். தகவல் துறையிலும், பாதுகாப்புத் துறையிலும் அவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்காதவை.

**விருதுகளும், பட்டங்களும் :**

டாக்டர் பிரேன்ராய் விண்வெளி விருது, ஓம்பிரகாஷ் பாசின் விருது, பத்மவிபூசன் விருது, நேரு தேசிய விருது, இந்திரா காந்தி விருது. மேலும் 1998ஆம் ஆண்டு கலாமுக்கு இந்திய நாட்டின் மிகச்சிறந்த விருதான பாரதரத்னா விருது வழங்கப்பட்டது.

**குடியரசுத் தலைவரானார் :**

சிறந்த விஞ்ஞானியாக மட்டுமின்றி சிறந்த தேசப்பற்றாளராகவும், திகழ்ந்த அவரது மாண்பைக் கண்டு மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், கலாமை இந்திய நாட்டின் ஜனாதிபதி பதவியில் அமர்த்தினார். இந்திய நாட்டின் 12வது குடியரசுத் தலைவராக அவர் பொறுப்பேற்றார்.

இந்தியாவின் ஏவுகணை மனிதர் என்று போற்றப்படுபவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.

**வழிகாட்டும் கலாம் :**

மாணவர்களே, இந்திய நாட்டின் வருங்காலத் தூண்கள் என்பதை உணர்ந்து இளைய தலைமுறைக்கு பல உபதேசங்களைக் கூறி வந்தார். நம் இந்திய நாட்டை 2020ல் ஒரு முழு வளர்ச்சியடைந்த நாடாக மாற்றிக்காட்ட அரும்பாடு பட்டு வந்தார். கலாமின் ஒவ்வொரு சொல்லும் செயலும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கானவை என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவரது எண்ணங்களை மனதில் கொண்டு நம் தேசத்தை ஒரு முழுவளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க பாடுபடுவோம்.

**கலாமின் பொன்மொழிகள் :**

அழகைப் பற்றி கனவு காணாதீர்கள், அது உங்கள் கடமையைப் பாழாக்கி விடும். கடமையைப் பற்றி கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை அழகாக்கும்....

கைரேகையை வைத்து எதிர்காலத்தைத் தீர்மானிக்காதே! கை இல்லாதவனுக்கும் எதிர்காலம் உண்டு.... முயற்சிகள் தவறலாம் முயற்சிக்கத் தவறக்கூடாது.... கண்கள் உறங்கலாம், கனவுகள் உறங்கக் கூடாது; கனவு காணுங்கள். வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு... ஒரு நாள் நிச்சயம் விடியும் - அது உன்னால் மட்டுமே முடியும்....

**முடிவுரை :**

கோடி கோடியாய் பணம் தருகிறோம் என்று நாசா கூறிய போதும் தன் தாய்நாட்டுக்கு மட்டுமே உழைப்பேன் என்று கூறிய தமிழன் A.P.J.அப்துல் கலாம்.

நம் தாய்நாட்டிற்காகவே பாடுபட்ட இவர் 27.7.15 அன்று மரணம் அடைந்தார். 2020ல் முழு வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியாவை மாற்றத் துடித்த அவரது கனவை நிறைவேற்ற நாமும் பாடுபடுவோம்.

கனவு காணுங்கள் என்று
சொன்னாயே தலைவா!
இதுவும் கனவாக இருக்க கூடாதா?
உமது மரணம்

**R.ராஜேஸ்** I B.Com IB

## சுமைதாங்கி



பெண்!
கருவில் சுமை!
பிறந்து வளர்ந்தவுடன்
கன்னித்தன்மை சுமை!

சிந்தனைகள் தூண்டும்போது
வாழ்க்கைச் சுமை!

குறிப்பிட்ட வயது வந்தவுடன்
குடும்ப பாரம் சுமை!
முகம் தெரியாத மற்றொருவரை
கரம் பிடிக்க கண்ணீர் சுமை!
கணவரோடு வாழ்ந்த வாழ்வில்
குழந்தை சுகமான சுமை!

காலம் முழுவதும் வாழ்ந்து சென்றாலும்
கல்லறை சுமை! எல்லாம் சுமை!
கண்ணீருடன் தூவப்படும் பூக்கள்
அங்கேயும் சுமை!

**து.கஸ்தூரி**
முதலாமாண்டு
இயற்பியல் துறை

# இந்நிலை மாறுமா?



நியாயங்கள்
அநியாயங்களாகின...
அநியாயங்கள்
நியாயங்களாகின...
படித்திருக்கும்
முட்டாள்களாய்... நாம்.

விளையாட நேரமில்லை
பள்ளிப்பளு...!
கிடைத்த நேரமும்
வீணானது
அலைபேசியிலும் முகநூலிலும்...!
எங்கே வளரும்....
சமத்துவமும் சகோதரத்துவமும்....?

விதையில்லாக்
காயும் கனியும்...!
விவரம் தெரியாமலேயே...
வியாபாரச் சந்தையில்
விலை போகும்... நாம்.

கேள்விக்குறியானது
ஏழை விவசாயியின் முதுகெலும்பு....
இன்று
விவசாயமே...
கேள்விக்குறியாய்...

மருந்தில்லாக்
காயும் இல்லை...
கனியும் இல்லை...!
மருந்தே உணவானது....
தலைமுறைகளைத்
தவிக்க விட்டோம்...
நாளை
தள்ளாட வழி வகுத்துவிட்டோம்...
தலைமுறையை...

விளைநிலங்கள்...
விலை நிலங்களாயின...
ஆங்காங்கே
அடுக்குமாடிக் குடியிருப்புகள்...
இதயம் சுருங்கிய உறவுகளைப்
படைத்துவிட்டோம்...!

மனிதம்
தொலைத்துவிட்டோம்...
மதங்கள் வளர்த்துவிட்டோம்...
எங்கே வளரும்... மனிதநேயம்...

பெண்கல்வி
உயர்த்திவிட்டோம்...
பெண்ணடிமை
குறைத்துவிட்டோம்... பின்
வன்கொடுமைகள் ஏனோ...
வளர்த்துவிட்டோம்...

சந்தர்ப்பங்கள்
சாட்சிகளாயின...
சூழ்நிலைகள்...
கைதிகளாயின..
உண்மைகள்.. ஏனோ
விலையாயின...

இந்நிலை மாறுமா?
ஆம்...
இந்நிலை மாறுமா??...நாளை...

**இரா.சங்கர்**
உதவிப் பேராசிரியர்
கணினி அறிவியல் துறை

# காட்டு வளமே நாட்டு வளம்

**முன்னுரை :**

மனிதன் குழந்தையாகப் பிறந்தது முதல் கிழவனாகி இறக்கின்ற வரை அவனது வாழ்க்கை பயணத்தின் ஒவ்வொரு தலையாய காலக்கட்டத்திலும் பின்னிப் பிணைந்திருப்பவை மரங்களே! "நீரின்றி அமையாது உலகு" என வள்ளுவர் அழகாகக் கூறியிருக்கிறார். மழை அந்த அளவிற்கு உலக இயக்கத்திற்கும் உயிர் வாழ்வதற்கும் விவசாயப் பசுமை வளத்திற்கும் அவசியமானது அம்மழை வேண்டுமானால் மரங்களை பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**இயற்கையன்னையின் பெருஞ்செல்வம் :**

காடுகளை மேம்படுத்துவது, வளர்ப்பது, பாதுகாப்பது என்பது மழை பெய்வதற்கு மட்டுமல்ல. காடுகள் இயற்கையன்னை தந்த பெருஞ்செல்வம். ஒரு நாட்டின் வளம் மதிப்பிடப்படுவதில் காடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. காடுகளை வளர்த்துப் பேணிக்காப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. கோடிக்கணக்கான மதிப்பு மிக்க உயர்தரத் தேக்கு, சந்தனம், என உயர்ரக மரங்கள் இருப்பது காடுகளால் தான். இவற்றை வளர்த்துப் பேணிப் பாதுகாப்பதன் மூலம் இயற்கை வளம் பேணி வளர்க்கப்படுகிறது. நாட்டின் பெரிய பொக்கிஷம் காப்பாற்றப்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இவையும் எந்த அளவிற்கு பங்காற்றுகின்றன என்பதை ஒவ்வொருவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இது மட்டுமா? பல அரிய பெரிய உயிர் காக்கும் மருந்துகள், உடல் நோய் தீர்க்கின்ற உயர்ந்த மூலிகைகள் காடுகளால் மட்டும் தான் கிடைக்கின்றன.

சுற்றுச்சூழல் மாசுபடாமல் பேணிப் பாதுகாக்கப்படுவதிலும், காடுகளின் பங்கு மிக மிக அதிகம். நில அரிப்பைத் தடுத்துப் பாதுகாப்பதும் காடுகள் தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. காலம் தவறாமல் மழை பெய்தால் தான், உணவு உற்பத்தியில் தன்னிறைவு என்ற ஒன்று சாத்தியமாகும். அதற்குக் காட்டு வளம் தான் மழையைத் தர முடியும். தூய்மையான, சுகாதாரமான, இதமான - குளிர்ந்த தென்றலை சுகமாக வீசுவது மரங்கள் தான்.

ஒரு நாட்டின் நிரந்தர - அழியாத செல்வமாகக் காடுகள் மதிக்கப்படுகின்றன. அந்த எண்ணத்துடன் நாம் காடுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்பிற்கும் காடுகள் துணைபுரிகின்றன. காகிதத் தொழில் வளர்ச்சிக்குத் தேவைப்படும் கட்டைகள், மூங்கில்கள், பிரம்புகள் காடுகளிலிருந்தே கிடைக்கின்றன. தீக்குச்சித் தொழிலுக்கும் பொருட்கள் கிடைக்கின்றன. அரக்கு, மரப்பிசின், தோல் பதனிடுவதற்குத் தேவையான பொருட்கள் டர்பைன்டைன் முதலியவை முக்கியக் காட்டுப் பொருட்களாகும். ரயில் பெட்டிகள் தயாரிக்கவும், மரச்சாமான்கள் செய்யவும் இப்படி பல விதமாக மரங்கள் பயன்படுகின்றன. மனிதன் பிறக்கும் போதும் அவனது வீடு மரத்தின் துணையால்தான் கட்டப்பட்டு இருக்கும்; அவன் இறக்கும் போதும் அவனை எடுத்துச் செல்லும் பாடையோ, சவப்பெட்டியோ மரத்தால் தான் உருவாகி இருக்கும்.

'எனக்கு மரத்தின் உதவியே தேவை இல்லை. மரங்கள் இல்லாமலே என்னால் வாழ்ந்து விட முடியும்'. என்று எந்த மனிதனாவது மார்தட்டி அறைகூவல் விடுக்க முடியுமா?

முடியவே முடியாது!

ஏதேனும் ஒரு வகையில் இந்த உலகில் மரத்தின் துணையோடு தான் மனிதன் வாழ

வேண்டியிருக்கிறது.

**காடுகளின் வகைகள் :**

காடுகளைப் பொதுவாக பெருங்காடு, குறுங்காடு, பொச்சைக்காடு, அரண் என வகைப்படுத்தலாம். வானளாவிய மரங்கள் பரந்து அடர்ந்து தொலைவிலிருந்து பார்ப்போருக்கு பசுந்தழைப் போர்வையுடன் கண்ணையும், கருத்தையும் கவர்வனவாய் அமைவன 'பெருங்காடு' எனப்படும். உயரத்திலும், பருமனிலும் குறைந்த அளவிலான மரங்கள் செறிந்த காடு 'குறுங்காடு' எனப்படும். கதிரவன் வெப்பத்தால் கரிந்த மரங்களையுடைய காடுகளை 'பொச்சைக்காடு' என்பர். இது பாலை நிலங்களிலே தான் காணப்படும். அரசனது காவலில் உள்ள காட்டைக் 'கணையம்' என்றும் 'அரண்' என்றும் கூறுவர்.

ஒரு நாட்டின் நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு காடு அமைதல் வேண்டும். நம் நாட்டில் இருபத்திரண்டு விழுக்காடு தான் காடுகள் இருக்கின்றன. அவற்றில் ஐம்பது விழுக்காடு காடுகள் அரசின் பாதுகாப்பில் உள்ளன. எஞ்சிய ஐம்பது விழுக்காடு பொதுமக்களால் அவர்கள் தேவைக்காகப் பாதுகாக்கப்படுகின்றன. நாட்டில் காடுகளின் அளவு குறைவாக இருந்த போதிலும் தரத்தில் உயர்ந்து விளங்குபவையாக உள்ளன.

**காடுகளின் பயன்கள் :**

ஓரறிவு உயிர்களாகிய தாவரங்கள் நீரும், நிழலும் உணவும், தூய காற்றும் அனைத்துயிர்க்கும் அளித்து வருகின்றன. காடுகள் இல்லையாயின் வெய்யவன் சுடுகதிர்களால் வெதுப்படும் இந்நிலம் நீர்ப்பசையற்று வறண்டு விடும். நீர் நிலைகளில் உள்ள நீர் ஆவியாகி வானின்கண் செல்கிறது. அவ்வாறு சென்ற மேகம் குறிப்பிட்ட அளவிற்குக் குளிர்ச்சியைப் பெற்றால்தான் மழையாக இறங்கும். அங்ஙனம் மேகத்தைக் குளிர்வித்து மழை பொழியச் செய்ய மரங்கள் அடர்ந்த காடுகள் உதவுகின்றன. அதனால் தான் 'வனமில்லையேல் வானமில்லை' என்று பெரியோர் கூறுவர்.

மக்கள் காடுகளை அழித்து வருவதால் தான் இன்று மழை அருகிப் போகிறது. ஒரு சிறு செடி தரும் குளிர்ச்சியை நூறு விசிறிகள் ஒருங்கிருந்து சுழன்றாலும் தந்துவிட முடியாது. மழையைப் பெய்விக்கும் காடுகளே மழையைப் பெய்விக்கவும் செய்கின்றன. காடுகளில் உள்ள மரஞ்செடி கொடிகளின் இலைகள் நீரை ஆவியாக மாற்றுகின்றன. எனவே பசுமரங்கள் நிறைந்த காடுகளைப் பசுங்கடல்கள் என்று அழைத்தால் மிகையாகாது.

காடுகளிலிருந்து பூ, காய், பழம், கிழங்கு, தேன் போன்றவை கிடைக்கின்றன. கால்நடைகளுக்குத் தேவையான உணவுகள் கிடைக்கின்றன. உணவேயன்றி நமது உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத தூய காற்றும் காடுகளில் உள்ள மரஞ்செடிகளாலேயே வரப்பெறுகின்றன. காடுகளில் வளரும் தேக்கு, பாலை, முதிரை, ஆக்சா முதலான மரங்கள் வீடுகள், கப்பல்கள், தொழிற்சாலைகள், படகுகள் முதலியன அமைத்தற்கேற்ற வலிமை வாய்ந்தவை.

**காடுகளின் அழிவு :**

காடுகளின் அவசியத்தையும், பயனையும் அறியாத மக்கள் காடுகளை அழிக்கத் தொடங்கினார்கள், காடுகளின் அழிவிற்கு மக்கட் பெருக்கமும் ஒரு முக்கியக் காரணமாகி விட்டது. பண்டைட மன்னர்களே காடுகளை அழித்து நாடாக்கினார்கள். குளம் தொட்டு வளம் பெருக்கினார்கள் என்று படிக்கிறோம். இயற்கைச் சீற்றத்தாலும் காடுகள் அழிந்தன. விலங்குகள் வனத்திற்குக் காவலர்களாக இருந்தன. மனிதன் எளிதல் நுழைய அஞ்சினான். ஆனால் இன்று அவற்றை வேட்டையாடி (யானைகளை தந்தத்திற்காகவும், புலியையும், மானையும் தோலுக்காகவும்) அழித்து விட்டன. பிறகு காடுகளையும், அரசுக்குத் தெரியாமல் மரங்களை வெட்டி விற்க அழிக்கலாயினர். மரங்களின் உராய்வினாலும் தீப்பிடித்துக் காடுகள் அழிகின்றன. அண்மையில் மெக்ஸிகோவிலும், வெனிசுலாவிலும் ஏற்பட்ட காட்டுத்தீயை எவ்வளவு முயன்றும் அணைக்க முடியவில்லை. அது பல மாதங்களாக எரிந்து கொண்டிருக்கிறது என்று அறிகிறோம்.

**அரசின் முயற்சி :**

காடுகளின் அழிவால் மழைவளம் குறைந்தது. வனவிலங்குகளின் எண்ணிக்கை குறைந்தது. அது கண்ட அரசு, இருக்கும் காடுகளை அழியாமல் பாதுகாக்க, தக்க முயற்சிகளை மேற்கொண்டது. புதிதாகக் காடுகளை வளர்க்கவும் தலைப்பட்டது. கோடிக் கணக்கில் பணம் செலவழித்து 'சமூகக்காடுகள்' என்ற பெயரில் நெடுஞ்சாலைகளின் இரு மருங்கிலும் காடுகளை வளர்த்து வருகிறது. அகிம்சா மூர்த்தியான அண்ணல் காந்தியடிகள் பிறந்த அக்டோபர் முதல் வாரம் 'வனவிலங்குகள் வாரம்' என்று விழாக் கொண்டாடி மாணவர்களுக்குக் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் வைத்து, காடுகளையும், காட்டு விலங்குகளையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தி வருகிறது. காடுகளின் பயன்களை நன்கு உணர்ந்த அமெரிக்கா, டென்மார்க், ஹாலந்து போன்ற நாடுகள் காடுகளை வளர்த்து வருகின்றன. கடல் மட்டத்திற்கும் கீழே அமைந்துள்ள ஹாலந்து, கடல்நீர் உட்புகா வண்ணம் தடுக்கக் காடுகளை வளர்த்து காத்து வருகிறது.

**முடிவுரை :**

காடு செழிக்க நாடு செழிக்கும்

மரம் செழிக்க மழை செழிக்கும்

என்பதை நன்கு உணர்ந்து தான் நமது அரசு வனங்களையும், வனத்தின் காவலர்களான வன விலங்குகளையும் பாதுகாக்கப் பெருமுயற்சி எடுத்து வருகிறது. 'மரம் நடு விழா' 'வன விலங்கு வாரம்' போன்றவற்றின் மூலம் மரங்களை வளர்க்கவும், காடுகளைக் காக்கவும் நாடு முழுவதும் பிரச்சாரம் செய்கிறது. 'வீட்டிற்கொரு மரம் வளர்ப்போம்' 'மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்' என்பதை மனதிற் கொண்டு மரங்களை வளர்ப்பதுடன் காடுகளையும் பாதுகாத்து மழை வளம் பெருக்கி நாடு செழிக்க உதவுவோமாக.

"மரங்கள் நாட்டின் வரங்கள்"

**K.பானுப்பிரியா**

இளநிலை விலங்கியல் முதலாமாண்டு



தாமஸ் ஆல்வா எடிசனின் கனவு மின்சாரம்
ஷாஜகானின் கனவு தாஜ்மஹால்
ராஜராஜ சோழனின் கனவு தஞ்சை பெரியகோவில்
விவேகானந்தரின் கனவு வலிமை மிகு பாரதம்

பாரதியின் கனவு பெண் விடுதலை
சார்லஸ் பாபேஜின் கனவு கணினி
மகாத்மா காந்தியின் கனவு வீரசுதந்திரம்
அப்துல்கலாமின் கனவு இந்திய வல்லரசு

உறக்கத்தில் வருவது அல்ல கனவு
உன்னை உறங்கவிடாமல் செய்வது கனவு!
வீரசுதந்திரம் பெறுவதற்கு முன்பே
ஆடுவோமே பள்ளு பாடுவோமே - ஆனந்த
சுதந்திரம் அடைந்து விட்டோம் என்றார் மகாகவி!
அதுபோல் கனவு வடிவம் பெற்றால்தான்
நிஜத்தில் வெற்றி பெறும்!

தோழா! உன்னிடம் நீ கேள்
சரித்திரம் படிப்பவனா? படைப்பவனா?
வாழ்க்கை விளையாட்டில் பார்வையாளனா?
விளையாட்டு வீரனா?
கை தட்டுபவனா? கை தட்டு பெறுபவனா?


தோழா முடிவு செய்
உன் கனவை உன் இலக்கை
முயற்சி செய் வெற்றியை முத்தமிட!

## வாசல்

ஜில்லென்று காற்று வீச
பூவெல்லாம் வாசம் வீச
குயில்களெல்லாம் கானம் பாட
பால்காரி பாடல் பாட
என் கனவோ கதை சொல்ல

தண்ணீரோ என்னைத் தட்டி எழுப்பியது
தேவரோ என்னை விழிக்கச் செய்து
மண்ணோ என்னை அழைத்தது.

உன் அன்பான கரங்களால்
உன் மனம்போல் வெள்ளை மணலால்
என்னை! அலங்காரம் செய் என்றது...



**How Much Power?**

All electrical appliances use energy the amount depends on their size and purpose : An Electric heater might use ten times as much energy as a single light bulb.

The energy an appliance uses is measured in watts these are named in honour of Scottish engineer "James Watt" (1736-1819). Who first worked out how to measure energy.

1. Air Conditioner 2500-3000 watts
2. Central heating pump 800 watts
3. Coffee Percolator 500-750 watts
4. Computer 400 watts
5. Cooker 10,000 watts
6. Deep Freeze 1000-2000 watts
7. Dish Washer 2000-2500 watts
8. Electric blanket 50-150 watts
9. Electric kettles 2200-300 watts
10. Electric razor 6 watts
11. Fan 50-1000 watts
12. Fluorescent light 60 watts
13. Food Miner 450 watts
14. Hair dryer 1000-1500 watts
15. Iron 1000-1500 watts
16. Light bulb 100 watts
17. Microwave oven 1500 watts
18. Photocopier 1500 watts

**Seven Secrets**

Seven Secrets of Success lying in room itself!

"Roof" says aim "High."
"Fan" says be "Cool"
"Clock" says every minute is "Precious"
"Mirror" says reflect before you "Act"
"Window" says see the "World"
"Calender" says be "Updated"
"Door" says push hard to achieve your "Goals"

**A Small Workshop to the Brain :**

the same letter is missing three times in each word.

1. M L RI
2. DI MI
3. INI U
4. A TE A
5. BA A E
6. R L AS
7. U IES
8. A RAC
9. CHA I
10. AXI U


Answers

1. Malaria
2. Dismiss
3. Minimum
4. Antenna
5. Baggage
6. Release
7. Mummies
8. Attract
9. Chassis
10. Maximum

**M.Karthika**
I M.Sc Physics

# குடி குடியைக் கெடுக்கும்

ஓர் ஊரில் இருந்த ஓர் அப்பா, அம்மா, இரண்டு மகன்கள் மற்றொரு ஊருக்கு வேலை செய்து பஞ்சம் பிழைப்பதற்காகக் குடிபெயர்ந்தனர். அப்பாவோ "போதைக்கு" அடிமை. அம்மாவுக்கோ பிள்ளைகளை எப்படியாவது வளர்த்து நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற ஆசை. இவர்கள் ஒரு வாடகை வீட்டில் குடியேறுகின்றனர். கையில் காசு குறைவாகவே இருந்தது. இன்று இரவு உணவு உண்பதற்குக் கூட அவர்கள் வைத்திருந்த காசு போதவில்லை. மறுநாள் காலையில் அம்மா ஏதாவது வேலைக்குப் போக வேண்டும் என்ற எண்ணத்துடன் வேலையைத் தேடி சென்றாள். அப்பாவோ எந்த வேலையும் செய்யாமல் வீட்டிலேயே இருந்தார். இரண்டு மாதங்கள் .சென்றன. அவர்களது இரண்டு மகன்களில் மூத்த மகன் கல்லூரியிலும், இளைய மகன் பள்ளியிலும் சேர்ந்து படிப்பைத் தொடங்கினர். அப்பாவுக்கோ குடும்பத்தைப் பற்றியோ, குழந்தைகளைப் பற்றியோ எந்தக் கவலையும் இல்லை. வாரத்தின் கடைசி நாளான சனிக்கிழமை வந்தது. அம்மா சம்பளம் வாங்கிவிட்டு வீட்டிற்கு வந்தாள். அன்று இரவு கழிந்து ஞாயிற்றுக்கிழமை காலையில் அம்மாவிடம் காசு கேட்டு அப்பா சண்டை போட்டார். அம்மா மது அருந்துவதற்கும் வீண் செலவு செய்வதற்கும் உங்களுக்கு நான் காசு தர முடியாது என்றாள் அம்மா. அப்பாவிற்கு கோபம் வந்தது. அம்மாவிடம் சண்டை போட்டுவிட்டு கோபத்துடன் வீட்டைவிட்டு வெளியே சென்றார். அவர் அவரது நண்பர்களுடன் சேர்ந்து அப்பாவின் மற்றொரு நண்பரிடம் கடன் வாங்கி அளவுக்கு அதிகமாக மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்தார். தெருவில் நின்று தகாத வார்த்தையால் அம்மாவையும் அவரது பிள்ளைகளையும் திட்டினார். அம்மா அவரை எதிர்த்து 'ஏன் இப்படிப் பண்றீங்க? உங்களுக்கு அறிவே இல்லையா?' என்று கேட்டாள். உடனே அப்பா "என்னையா எதிர்த்து பேசுற?" என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் வந்து அம்மாவை அடித்தார். இளைய மகன் "அம்மாவை அடிக்காதீர்கள் அப்பா" என்று அடித்துக்கொண்டே கூறினார். மூத்த மகனோ அவனால் முடிந்தவரை அப்பாவைத் தடுத்தான். சிறிதுநேரம் கழித்து அப்பா தெருவிற்கே சென்று அம்மாவையும், ரோட்டில் வருபவர்களையும், செல்பவர்களையும் தீயவார்த்தையால் திட்டினார். பின்பு போதையில் வீட்டிற்கு வெளியே இருந்த "மோட்டார் வண்டியை" பெட்ரோல் ஊற்றி பற்றவைத்தார். அருகில் இருந்தவர்கள் ஓடிவந்து "தீ"யை அணைத்தனர். அம்மாவுக்கோ அழுகை நிற்கவே இல்லை. இதே போல் கொடுமை அவர்களது வீட்டில் வாரா வாரம் நடந்தது. பெரிய மகனோ அப்பா செய்யும் கொடுமையை நினைத்தும், அம்மாவை நினைத்தும் வருந்திக் கொண்டே இருந்தான். அவனால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. மூத்த மகன் தெருவில் நடந்து போகும் போது அவனது நண்பர்கள் "அடேய் உங்க அப்பா ஒரு குடிகாரனா? அங்கு பார் உங்க அப்பா கீழே விழுந்துகிடக்கிறார்" என்று அவனிடம் கூறியும் அவனைக் கிண்டல் செய்தும் வந்தனர். ஒரு நாள் அவனது அப்பா "நான் திருந்திவிட்டேன்" என்று கூறி ஒரு மாதம் வேலைக்குப் போக ஆரம்பித்தார். மாதக்கடைசியில் சம்பளம் வாங்கினார். சம்பளத்தைப் பார்த்தவுடன் "வேதாளம் முருங்கைமரம் ஏறியது" போன்று அவர் மீண்டும் குடிக்க ஆரம்பித்தார். சம்பளம்



வாங்கியதும் அனைத்துப் பணத்தையும் குடித்தே அழித்துவிட்டார். அவர் மீண்டும் பழைய நிலைமைக்குச் சென்றார். வீட்டில் இருந்த கட்டில், பீரோ, போன்றவற்றை அடகுவைத்துக் குடித்தார். ஒரு நாள் மழை பெய்தது. அந்த மழையிலும் அவர் வீட்டில் சண்டை போட்டு அவர்களை வெளியே துரத்திவிட்டார். அவர்கள் போலீஸிடம் சென்று புகார் அளித்தனர். போலீஸ் வந்து அவரைப் பிடித்துச் சென்றது. இரண்டு நாள் கழித்து அப்பாவை போலீசார் வெளியே விட்டனர். அவர் அப்பவும் திருந்தவில்லை. அடுத்த நாள் அவர் தேவையில்லாமல் வீட்டில் சண்டை போட அந்த வீட்டு முதலாளி அவர்கள் இருந்த வாடகை வீட்டைக் காலி செய்யச் சொன்னார். அம்மாவிற்கும், அவளது பிள்ளைகளுக்கும் எங்கு செல்வது என்று தெரியாமல் திகைத்து நின்றனர். அன்றும் கனமழை பெய்தது. அவர்கள் மூவரும் நிம்மதி, சந்தோஷம் இழந்து நடுத்தெருவில் நின்றனர். இப்படி அவர்கள் நடுத்தெருவில் நின்றதைப் பார்த்தும் கூட அப்பா திருந்தவில்லை. அவர்களை அப்படியே விட்டுவிட்டு அவர் எங்கோ சென்றுவிட்டார். அந்த அம்மாவும் இரண்டு மகன்களும் அவர்கள் இருந்த வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு சிறிய வீட்டிற்குக் குடியேறினர். அம்மா நடந்த அனைத்துத் துன்பங்களையும் நினைத்துக் கொண்டே வேலைக்கு சென்றாள். சரியான வருமானம் இல்லாததால் அம்மாவால் அவளது இரண்டு மகன்களையும் படிக்க வைக்க இயலவில்லை. அதனால் அந்த இரண்டு மகன்களும் வேலைக்குச் செல்லத் தொடங்கினர். பின்பு அவர்கள் மூவரும் அப்பா திருந்தி நல்லவராகி திரும்ப வரமாட்டாரா என்று வருத்தத்துடன் காத்துக் கொண்டு இருந்தனர்...

"ஓர் அப்பாவின் குடிப்பழக்கத்தால் ஒரு குடும்பம் நடுத்தெருவில் நிம்மதியை இழந்து நின்றது."


"மேலும் அந்த இரண்டு மகன்களும் செல்வத்தைவிட உயர்வாக நினைக்கும் கல்வியை இழந்தனர்."

ஆகவே "குடி குடியைக் கெடுக்கும்", "குடிப்பழக்கம் நாட்டிற்கும், வீட்டிற்கும் கேடு தரும்."

**ச.அசாருதீன்**

பி.காம் பி முதலாமாண்டு

## நட்பு



நட்பு எனும் கவிதைப் புத்தகத்தில்
வெறும் காகிதப் பக்கங்களாய்த்
தோன்றினோம் நாம்...!
காலங்கள் மாறின
கவலைகள் தீர்ந்தன
எல்லாம் நண்பனைக்
கண்ட தருணத்தில்!

காகிதக் கவிதைக்குள் பூட்டி
வைக்கப்பட்ட நம் இதயம்
கண்ணீர் எனும்
காவியம் வழியாக
வெளியே வந்தது...!

நட்பு எனும் கரங்களால்
கைகொடுத்து சிறகடிக்க
தொடங்க பறவைகள் ஆனோம்
நாம்...!

என்றும் அன்புடன்
**R.பூபாலன்**
II B.Com B

## சொந்தங்களா? நண்பர்களா?

உன் வாழ்நாளில் நீ மகிழ்ச்சியாக!
இருக்க வேண்டும் என்றால்
நீ உனது சொந்தங்களை
நண்பர்களாகப் பார்க்க வேண்டும்!
உனது நண்பர்களை
சொந்தங்களாகப் பார்க்க வேண்டும்
அப்போது உனது வாழ்நாளில்
துன்பம் என்பதே இருக்காது.

## அவளின் நினைவுகள்

அவள் என்னை விட்டுப் பிரிந்து போகும் போது
நான் அவளுடன் இருந்த நாட்களை
என் மனதில் நினைவாக வைத்திருக்கிறேன்
நான் அவளோடு நிஜத்தில் வாழவில்லை
அவளின் நினைவோடு வாழ்கிறேன்

## நட்பு


ஒருவனுக்கு தோழனும், தோழியும்
துணையாக இருக்கும் போது
அவனுக்கு தோல்வி என்பதே கிடையாது

## யார் செல்வந்தர்?

உலகில் எத்தனை மனிதர்கள்
செல்வமும், சொந்தங்களும் சேர்த்து வைத்திருந்தாலும்
அவர்கள் செல்வந்தர்கள் அல்லர்
நல்லது, நன்மையும் அமையக்கூடிய
நட்பு இருந்தால்தான் அவர் செல்வந்தர் என்று கூறலாம்
அதை நான் சொல்வேன். எனக்கு நட்பு கிடைத்தது
நான்தான் உலகில் பெரிய செல்வந்தன்

## நன்மை அமையும் நட்பு

உன் இரண்டு கண்களாக உனக்கு
தோழனும், தோழியும் இருந்தால்
நீ பார்ப்பது அனைத்தும்
உன் வாழ்க்கையில்
உனக்கு நன்மைகளாகவே அமையும்



**மு.முஹம்மது பிலால்**
III B.Com - "B"

## மழை

மழைத்துளிகள் ! அழகான மங்கையின்
கருணைக் கண்கள்....
ரசிக்கத் தெரிந்தவர்களுக்கு
விண்மீன் கூட்டங்கள்...
ரசிக்கத் தெரியாதவர்களுக்கு
சூரியனின் நெருப்பு அலைகள்...

## மழையின் சிறப்பு

மனிதனைப் படைத்தது கடவுள் என்றால்
அவனின் வறுமை என்னும்
கண்ணீரைத் துடைப்பது மழை...

இயற்கையைப் படைத்தது கடவுள் என்றால்
தன் கண்ணீரைக் கொண்டு இயற்கையை
அழகுறச் சிரிக்க வைத்து ரசிப்பதும் மழை...

தன் குழந்தையின் சிரிப்பினைத் தாய்
பார்த்து ரசிப்பது போல...
மனிதனின் சிரிப்பினைப் பார்த்து
ரசிப்பதும் மழை....
எந்தவித உறவும் இல்லாத போதும்
நம் சந்தோஷத்திற்காக அழுவதும் மழை....

## மழையின் ஏக்கம்

நான் வரவில்லையென்றால்
நிலாச்சோறு எடுத்து அழுகிறார்கள்...
ஆனால்...
நான் வந்ததும் வரவேற்க
வேண்டிய அவர்களோ
என்னைக் கண்டு பயந்து வீட்டினுள்
சென்று ஒளிந்து கொள்கிறார்கள்...

## மழையின் அன்பு

அருவியிலிருந்து கொட்டும்
நீரின் அளவு குறைவு...
மனிதனின் வறுமையை நினைத்து
வானிலிருந்து கொட்டுகின்ற
மழைத்துளியாகிய என்
கண்ணீருடன் ஒப்பிடுகையில்....!

## மழையின் சோகம்

மனிதர்களுக்கு மட்டும் சோகம்
என்ற வலி இல்லை...
மனிதர்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கும்
இயற்கையாகிய எங்களுக்கும் வலி உண்டு...
இதை மனிதர்கள் ஏற்க மறுப்பதினால்தான்
மழையாகிய நான் புயலாக மாறுகிறேன்...

## மழையின் கோபம்

நம்மீது கொண்ட பாசத்தினால்
அதிகமாக அழும்போது
வருவதுதான் புயல்...
கண்ணீரைத் துடைக்கக் காரணமான மழையே
நம் கண்ணீருக்கும் காரணமாகிறது....
இயற்கையின் மகிழ்ச்சிக்குக் காரணமான மழையே
இயற்கையின் சோகத்திற்கும் காரணமாகிறது...
கடவுளால் கூடத் துடைக்க முடியாத
நம் கண்ணீரைத் துடைப்பதாலோ என்னவோ...
உரிமையுடன் நம்மையும்
அமைவக்கப் பார்க்கிரசு மமை...



## மழைக்கு நம்முடைய நன்றி

நம்முடைய கஷ்டத்தை நினைத்து
நாம் அழுகின்ற போது...
நம் கண்களிலிருந்து வரும்
கண்ணீரை விட...
மழையினால் நமக்கு வந்த
கஷ்டத்தை நினைத்து
நாம் அழுகின்ற போது
நம் கண்களிலிருந்து வரும்
ஒருதுளி கண்ணீருக்குத் தான்
மதிப்பு அதிகம்...

நம்மை நினைத்து அழுகின்ற
இயற்கையாகிய மழையை நினைத்து
நாம் அழுவதினால்...

**W.சரண்யா**
முதுநிலை கணிதவியல் இரண்டாம் ஆண்டு

# என்ன சொல்லி விழுகிறது மழைத்துளி

மழைத்துளி....
நான் மண்ணின் காதல்...
என்னை சேர்க்க வைக்கும்...
இந்த உயிர்களின் தேடல்...!

நான் வரம் வாங்கி
வருகிறேன்...
உன்னைக் காண
நீ கொண்ட தவத்தால்...!

வெறும் நிலங்களையும்
விளை நிலங்களாக
மாற்றுவேன்...!

என் பருவம் தோறும்
வந்து விடுவேன்
உன்னைக் காண...!

பசியோடு இருக்கும்
என் பச்சை இலை மரங்களுக்கு
"பாலாக"

நான் விழுகிற பொழுது
என்னைப் பிடிக்க யார் உண்டு...!

மனிதா நீயும்
குடைக்குள்ளே புகுந்து கொள்ள...

நான் சாலையில்
வீழ்கிறேன் வீணாக...!

வருங்காலம்
எனது வருகை
வேண்டுதே
உனது உலகம்...!



நான்
வரும் பொழுது
என்னைக் காக்க
எவன் உண்டு...?

மாசு கலந்த
புகை மண்டலம்
எனது உயிரை மாய்க்க...!

என் பருவம் தவறியும்
வரத் தவிக்கிறேன்
உன்னைக் காண...!

என் பாசம்
தவறியதால் அல்ல...!

நீ பாவம்
செய்ததால்
மனிதா...!

**A.சையது தபுதாஹீர்**
இளநிலை மூன்றாமாண்டு வேதியியல்

# உன் நினைவுகள்



எனக்கின்றும் ஞாபகம் இருக்கிறது தாயே!
ஊரில் களவாணிப் பசங்களோடு
உறவாடிக் கெட்டு விடாமல் - என்னை
களத்து மேடு தூக்கிச் சென்று
கையில் கரும்பொன்றை வாங்கித் தந்து
நான் கடிக்கின்ற வேளையிலே - என்
கையில் கட்டெறும்பு ஒன்று கொட்டி விட
நான் அழுத வேளையிலே
ஐயோ! என்று பதறிக்கொண்டு நீயும் ஓடிவர

ஈர விறகெடுத்து மண்பானை சோறாக்க
விறகிலோ தேளொன்று இருந்து விட
அது உன் கையில் கொட்டி விட
ஐயோ! என்று பதறிய வேளையிலே
வலியைப் பொறுக்காமல் நானும் அழுது விட
எனக்கின்றும் ஞாபகம் இருக்கிறது தாயே!

சாயங்கால வேளையிலே பால்நிலா அமுதூட்டி
இரவெல்லாம் சீராட்டி தாலாட்டி - என்னை
உறங்க வைத்து விட்டு - நீயோ
துயரத்தில் துன்பத்தில் நினைத்து வாடும்
உன் கனவுகளும் சொல்ல முடியாத
உன் உதடுகளும் - எனக்குத்
தெரியாதென்று நினைத்தாயா?

தாயே!
என்னோடு நீ இல்லை எனத் தெரிந்தும்
பேசிக் கொண்டிருக்கிறேன்
மரகதமாய் ஒட்டிக்கொண்ட
உன் நினைவுகளுடன்...!

**K.பானுப்பிரியா**
இளநிலை விலங்கியல் முதலாமாண்டு

# Technology (தொழில்நுட்பம்)

இன்றைய காலகட்டத்தில் ஸ்மார்ட் போன்கள் (Smart Phone) தான் நமது முதலாவது நண்பன் என்று கூறும் அளவிற்கு ஸ்மார்ட் போன் பாவனையானது இன்றைய சமூகத்தில் நம்மவர்கள் மத்தியில் காணப்படுகிறது. நமது பல்வேறு வகையான வேலைகளை மிக இலகுவாக செய்து முடிக்க இந்த ஸ்மார்ட் போன்கள் பெரிதும் உதவுகின்றன.

ஸ்மார்ட் போன் வைத்திருப்பவர்கள் அனைவரும் இணையத்தைப் பயன்படுத்தத் தவறுவதில்லை. ஸ்மார்ட் போனில் உள்ள பல ஆப்ஸ்கள் இணையத்தை மையமாகக் கொண்டே செயல்படுகிறன்றன.

Mobile Data வை ON செய்தவுடன் 2G, E, 3G, H, H+, 4G என்று குறியீடுகளைக் காணலாம். அதைப் பற்றிய சிறுகுறிப்பு :

2G - இது 2G Network Internet GPRS (General Packet Radio Service) யை Connect செய்வதற்கான Symbol.

இதன் வேகம் மிக மிகக் குறைவாகவே இருக்கும். இதை 2000-2009 ஆண்டுகளுக் கிடையில் அதிகம் பார்த்திருக்கிறோம்.

இதன் மூலம்

1 GB Data வை Download செய்ய 165 மணிநேரம்

1 GB Data வை அனுப்ப (Send) 165 மணிநேரம் பிடிக்கும்.

"E" இதுவும் 2G (2.5G) Network ஆகும்.

EDGE (Enhanced Data Access for GSM Evolution) Mobile Internet ஆகும்.

2008 முதல் இதன் பயன்பாடு அதிகமாக உள்ளது.

இதன் மூலம்

1 GB Data வை Download செய்ய 44 மணிநேரம்

1 GB Data வை அனுப்ப (Send) 44 மணிநேரம் பிடிக்கும்.

இந்தியாவில் "E" பயன்பாடு அதிகமாகக் காணப்படுகிறது.

"3G" இது 3G Mobile Internet UMTS (Universal Mobile Telecom System) Connect செய்வதன் மூலம் தோன்றும் குறி. இது இயங்க அவசியம் 3G இயங்குதள மொபைல் (Smartphone) தேவை.

இதன் மூலம்

1 GB Data வை Download செய்ய 6 மணிநேரம்

1 GB Data வை அனுப்ப (Send) 18 மணிநேரம் பிடிக்கும்.

"H" இது 3G Mobile Internet HSPA (High Speed



Packet Access) கனெக்ட் செய்வதன் மூலம் தோன்றும் குறி.

இதை ஸ்மார்ட் போன் மூலம் மட்டுமே பயன்படுத்த இயலும்.

1 GB Data வை Download செய்ய 25 நிமிட நேரமும்

1 GB DATA வை அனுப்ப 45 நிமிட நேரமும் ஆகும்.

"H+" - இதுவும் 3 G Mobile Internet EHSPA (Enolved High Speed Packet Access) கனெக்ட் செய்வதன் மூலம் வரும் குறியீடு.

இது SmartPhone ல் மட்டுமே இயங்கும்.

I GB DATA வை Download செய்ய 5-20 நிமிடமும்

1 GB DATA வை அனுப்ப 15-36 நிமிடமும் ஆகும்.

"4G" இச்சேவை 4G Network Internet - LTE (Long Term Evolution) கனெக்ட் செய்வதற்கான குறி. தற்போது இந்தியாவில் இதன் வளர்ச்சி அதிகமாகக் காணப்படுகிறது.

இதன் வேகம் மிகவும் அதிகம். இது இயங்க 4G இயங்குதள மொபைல் தேவை.

1 GB DATA வை Download செய்ய 3 நிமிடமும்

IGB DATA வை அனுப்ப 5 நிமிடமும் போதும்.



**கோ.வினோத்குமார்**
II B.Sc., Physics






**கோகிலவாணி**
I B.Sc., (CS)



**G.யோகேஸ்வரி**
I M.Sc., (Physics)



**K.தமிழ்ச்செல்வி**
I B.Sc., (Comp. Sci)




**கோ.வினோத்குமார்**
II B.Sc., Physics




**R.செந்தில்குமார்**
I BA English (Lit)



**கோ.வினோத்குமார்**
II B.Sc., Physics



**R.சரவணகுமார்**
I BA History



**C.ஹேமாவதி**
II B.Sc., Maths



**G.உமாமகேஸ்வரி**
III B.Sc., Chemistry (E.M)



**P.சரத்குமார்**
II B.A English (Lit)

# English Today: An Instrument for Success.

**Dr. Susan Nirmala.S**
Assistant Professor in English.

Communication is the backbone of all businesses around the world. A world without communication is unimaginable today. No doubt, the world has also become a global village because of the advancement of communication and technology. The use of smart phones and laptops 24x7 has become a basic necessity in businesses today.

The business world has become more professional than it was in the earlier years. No business man prefers to have local markets. The motto everywhere is "Go Global". Products which are manufactured in any part of the world are easily accessible and available even in a remotest place on earth because of the communication facilities. With the expansion of multinational organizations and worldwide business organizations, there is a demand for good communication also. Businesses cannot survive and grow without proper communication.

The English language has become a global language, a development which has come up as a result of the colonization of many countries by the British and also because of the flexibility with which the language develops every day. Many words of languages of other countries of the world have been inducted into the English language. One can even find words of Indian origin (a country which is known for its multilingualism) in the Standard Oxford Dictionary of English. To quote a few- veranda (Hindi), Jungle (Hindi), Loot (Hindi) Pandal (Tamil) Coolie (Tamil) Coir (Malayalam) Pongal (Tamil) Anaconda (Tamil-Srilanka) are some words which are found in the Standard Oxford English Dictionary and used by people around the world.

People working in MNC's or enterprenuers wanting to have international markets for their products will have to effectively interact and communicate with people of different nationalities and communities. Professionals in organizations today will have to spend most of their time communicating both internally-within various departments Purchase, Sales, HR, Accounts, Finance etc., and externally- with the government sectors, bankers, lawyers, public, press, and with like-institutions. And therefore a whole lot of communicative activities are done in businesses today- writing letters, reports, minutes, circulars, agenda, making presentations, discussions in meetings, responding to the public, advertisements and much more.

Proper and right communication can be done only if a person is proficient in English, which means one must be proficient in all the four skills of the language- Listening, Speaking, Reading and Writing. This situation has influenced English language teaching and learning through out the world. A number of language lab centers have mushroomed in the recent past and institutions of higher education focus on developing the language skills of learners. One pertinent example to quote is our neighbouring country, China which has emerged as a successful country in the global economy just because of its recent surge into the English language. Thus, it has become inevitable to communicate in English in order to be on the pinnacle of success.


Learners of English as a foreign language need to concentrate on the passive skills of language learning- reading and listening. Reading the interesting facts of a standard newspaper and listening to good news channels in English can help one develop their active skills of speaking and writing. Clearing an English proficiency test has become a necessary qualification for many respectable jobs. Candidates opting to go overseas to the English speaking countries will have to get through competitive exams like GRE, TOFEL,IELTS all of which focus on the skills of language. Certificate of English proficiency has become a big business, but it is even bigger business for the test takers.


Learning a language is just like learning to drive a vehicle. The interest has to come from the learners side and the teacher's role is to be a facilitator. English as a language cannot be learnt by rote or just by learning grammar. It has to be definitely put into practice. Continuous and constituent reading and listening practices would help much. Many self study materials like softwares and websites are also available for easy improvement in the language. www.a4esl.org, www.esl.about.com, www.bbc.co.uk, www.usingenglish.com, www.english.purdue.edu are some of the open source websites which learners can use to improve their language skills.


Power and influence are the wheels of the chariot to success. One cannot have power and influence, if one cannot have mastery over the English language. And mastering the English language has become synonymous with socio economic success both of an individual and the society at large. The need of the hour is to learn to communicate in English and do it well. Today, the business world is in need of efficient, enthusiastic and dynamic professionals who can communicate effectively in the English language.

## 24.3.2016 இல் நடைபெற்ற விளையாட்டு விழா நிகழ்வுகள்











# OUTGOING STUDENTS

## Department of Commerce



B.Com A 2013-16



B.Com B 2013-16



B.Com IB 2013-16



M.Com 2014-16



MIB 2014-16

## Department of Mathematics



B.Sc. Maths 2013 - 16

# Department of Computer Science



B.Sc. CS 2013-16



M.Sc. CS 2014-16

# Department of Zoology



## 2015 - 16 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற அரிய நிகழ்வுகள்
























Thinking is the Capital
Enterprise is the way
Hard work is the Solution



# ECO CLUB ACTIVITIES














V A TREE
YGEN FREE


Chikkanna Govt. Arts College
ECO CLUB


# NSS ACTIVITIES






# NCC ACTIVITIES















கலாம் கனவுப் பூங்காவில் 1000 மரக்கன்றுகள் நடும் விழா
பசுமை சுற்றுச்சூழல் இயக்கத்தால் நடத்தப்பட்டது.

# CHIKKANNA GOVERNMENT ARTS COLLEGE

(Affiliated to Bharathiar University, Coimbatore)
Re-accredited with B Grade by NAAC

College Road, Tiruppur 641602, Tamilnadu.
Phone : 0421 - 2242152    Fax : 0421 - 2246600
E-mail : principal@cgac.in    Web : www.cgac.in